Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்

(சி-648)

(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)



மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 28 (03.03.2003) திங்கட்கிழமை இதழ் :152






கிளிநொச்சி வந்திறங்கிய பாலசிங்கம் அழைத்து வரப்படுவதையும், தமிழ்ச்செல்வன் மற்றும் நடேசனுடன் பாலா கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# வன்னிக்குத் திரும்பிய பாலசிங்கம்

# பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு!

## பல முக்கிய விடயங்கள் கலந்தாய்வு

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை, அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றுச் சந்தித்துப் பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடல் நடத்தியுள்ளார். லண்டனில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக வன்னிக்குத் திரும்பிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம், நேற்று மாலை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்தார்.**

முன்னதாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திறங்கியதும் - விமானத்துக்குள்ளேயே குடிவரவு , குடியகல்வு - அதிகாரிகளின் பதிவுகள் இடம்பெற்றன. அங்கிருந்து ஹெலியில் புறப்பட்ட இவர்கள், நேற்றுப் பிற்பகல் 3.55 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்தனர். இவர்களை விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன், மாலதி படையணிச் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, அரசியற்துறை மகளிர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வர்த்தகக் கண்காட்சிக்காக முகமாலையில் சோதனையில்லையாம்

'இம் - எக்ஸ்புறோ 2003' சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு, ஏ-9 வீதி சோதனைச் சாவடிகளை சோதனை நடத்தாமல் மூன்று நாட்களுக்குத் திறந்து விட அரசாங்கம் இணங்கியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இம்மாதம் 30 ஆம் திகதி முதல் ஏப்ரல் முதலாம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில், யாழ்ப்பாணத்திலிருந்து பொருட்களைக் கொண்டு செல்லவே மூன்று நாட்களுக்கு முகமாலைச் சோதனைச் சாவடியைத் திறந்துவிடுமாறு இலங்கை வர்த்தக சம்மேளனம் கோரியிருந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அர்ப்பணிப்பு பூரிப்பைத் தருகின்றது!

### பேராயர் ஒஸ்வால் கோமிஸ் பாராட்டு

புலிகளின் சமாதானத்துக்கான அர்ப்பணிப்பால் தாம் பூரிப்படைந்ததாக, கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் ஒஸ்வால் கோமிஸ் தெரிவித்தார்.

எட்டு ஆயர்களுடன் வடபகுதிக்கான விஜயத்தை முடித்துவிட்டு கொழும்பு திரும்பிய பேராயர் ஒஸ்வால் கோமிஸ் செய்தியாளரிடம் பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

நான்கு நாட்கள் வடபகுதியில் தங்கியிருந்த தாம், கிளிநொச்சியில் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்ததாகவும், இதன்மூலம் புரிந்துணர்வு உடன்பாடு மற்றும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு தாய்லாந்து அரசாங்கம் உதவும்!



தற்போது பல விட்டுக்கொடுப்புக்களோடு முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கு, தாய்லாந்து தன்னாலான ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருக்கும். இதேவேளை, வடக்கு - கிழக்கு மக்களின் விவசாய, மீன்பிடி மற்றும் கல்விசார் அபிவிருத்தித் திட்டங்களிலும் கூட்டு உதவிகளை வழங்க எண்ணியுள்ளோம் என்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த, தாய்லாந்தின் இலங்கைக்கான தூதர் ரொம் ரெயினன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் நடந்த 'பலன்ஸ் ஸ்ரைல்' பயிற்சி அமெரிக்கப் படையினருக்கு உதவியதாம்

இலங்கைப் படையினருக்கு வழங்கப்பட்ட 'பலன்ஸ் ஸ்ரைல்' பயிற்சி நடவடிக்கை அமெரிக்கப் படையினருக்கும் பயன்மிக்கதாக இருந்ததாக அமெரிக்கப் படையினருக்குப் பொறுப்பாக இருந்த லெப்.கேணல் றிச்சர்ட் எஸ்.கிர்மன் தெரிவித்தார்.

கடந்த வாரம், அமெரிக்கப் படையினரும், இலங்கைப் படையினரும் இணைந்து நடத்திய 'பலன்ஸ் ஸ்ரைல்' நடவடிக்கை முடிவடைந்தது. இதில் 200 இலங்கைப் படையினரும், 60 அமெரிக்கப் படையினரும் கலந்துகொண்டனர். எட்டு வாரங்கள் இந்தப் பயிற்சிகள் நீடித்தன.

தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளிலும், இப்பயிற்சிகள் நடைபெற்றன. இப்பயிற்சிகள் அமெரிக்கப் படையினருக்கும் மிகுந்த உதவியாக அமைந்ததாக தெரிவிக்கப்பட்டது. கெரில்லா யுத்தமொன்றை எப்படிக் கையாள்வது என்பது குறித்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



**அப்ப அரைவாசிப் பேர் வேலி தாண்டின ஆக்களெண்டு சொல்லுங்கோவன்...**

## 60 ஆயிரம் படையினர் இதுவரை தப்பியோட்டம்!

### கடந்த ஆண்டே அதிகம் பேரென சாதனை

கடந்த மூன்று வருடங்களில், 2002 ஆம் ஆண்டிலேயே கூடுதலான படையினர் இராணுவத்தை விட்டுத் தப்பியோடியதாக, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்தார். 2000 ஆம் ஆண்டில் 4,985 படையினரும், 2001ஆம் ஆண்டில் 5,092 படையினரும், 2002 ஆம் ஆண்டில் 7,393 படையினரும் தப்பியோடியுள்ளனர்.

இதுவரை காலமும் மொத்தம் 51 ஆயிரத்து 413 படையினர் இராணுவத்திலிருந்து தப்பியோடியதாகவும், பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்தார். இவர்களை விட, 4833 கடற்படையினரும், 4255 விமானப்படையினருமாக கடந்த காலங்களில் 60,501 படையினர் தப்பியோடியுள்ளனர்.

இராணுவத்தில் இணைய வருவோர், சில மாதங்கள் பணியாற்றி 40 ஆயிரம் 50 ஆயிரம் ரூபாவுடன் ஊர் திரும்பினால், அப்பணம் செலவழியும்வரை அவர்கள் பணிக்குத் திரும்புவதில்லை. செலவழிந்ததும் இராணுவத்தில் வந்து இணைவதாகவும் பிரிகேடியர் சனத் கருணாரட்ண மேலும் தெரிவித்தார்.

# இந்திய அணியின் வெற்றியை அடுத்து குஜராத் மாநிலத்தில் மதக் கலவரம்!



இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நடந்த உலகக்கிண்ணப் போட்டியில், இந்தியா ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, மேற்கு மாநிலமான குஜராத்தில மதக் கலவரங்கள் இடம்பெற்றுள்ளன. இந்து மற்றும் முஸ்லிம் மதத்தவர்களிடையே இந்த மோதல்கள் நடைபெற்றுள்ளன.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே கடந்த மூன்று வருடங்களாக எந்தக் கிரிக்கெட் போட்டிகளும் நடைபெறவில்லை.

மேற்படி, கிரிகெட் போட்டியைப் பெருமளவான இந்திய மக்கள் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்ததால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை, நாடு முழுவதும் அமைதியைப் பேணுவதற்காக பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தைத் தாம் உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளபோதிலும், கிரிக்கெட் ரசிகர் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இஸ்ரேலிய ஹெலிகளின் தாக்குதலில் இரு பலஸ்தீனர்கள் பலி; 35 பேர் காயம்

(காஸா)

காஸாப் பள்ளத்தாக்கில் இஸ்ரேலியக் ஹெலிகொப்ரர்கள் நடத்திய தாக்குதலினால், இரு பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை நூறு கிலோ கிராம் எடையுள்ள வெடிகுண்டு ஒன்றை இஸ்ரேலியப் படையினர் வீதியோரத்தில் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து மேற்படி தாக்குதல்களை இஸ்ரேலியர்கள் மேற்கொண்டனர்.

கொல்லப்பட்ட இரு பலஸ்தீனர்களில் ஒருவர் இஸ்ரேலியப் படையினருடனான துப்பாக்கித் தாக்குதலின்போதும், மற்றைய நபர் தனது குடியிருப்புப் பகுதியில் இருந்து இஸ்ரேலிய இராணுவத்தினரின் இராணுவ நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டிருந்தபோது கொல்லப்பட்டதாகவும் பலஸ்தீன உத்தியோகபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படித் தாக்குதல் சம்பவத்தின்போது 35 பலஸ்தீனர்கள் படுகாயமடைந்தனர்.

# அல்கெய்டா மத்தியகுழு உறுப்பினர் பாகிஸ்தானில் வைத்துக் கைது!



அல்கெய்டா அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் ஒருவர் பாகிஸ்தானில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காலித் ஷேக் முகமட் என்ற மேற படி நபர் அல்கெய்டாத் தலைவர் பின்லேடனுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பதுடன் அல்கெய்டா அமைப்பின் சிரேஷ்ட அங்கத்தவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் உலகவர்த்தக மையம் மீது 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ள காலித் ஷேக முகமட்டுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக நம்பப்படுகிறது.

மேற்படி நபரின் கைதினைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ டபிள்யூ புஷ் மிகவும் அற்புதமான நடவடிக்கை எனப் பாராட்டியுள்ளார்.

# ஈராக் மீது போர் அச்சுறுத்தல் வேண்டாம் அமெரிக்காவிடம் பாப்பரசர் வலியுறுத்து!

## விசேட தூதுவர் புஷ்ஷைச் சந்திப்பார்

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா யுத்தத்தினை ஆரம்பிக்கவுள்ளதாக அச்சுறுத்த வேண்டாம் எனக் கோருவதற்காக, பாப்பரசர் ஜோன் போல், தனது விசேட பிரதிநிதியை அமெரிக்க ஜனாதிபதியிடம் அனுப்பத் திட்டமிட்டுள்ளார்.

அமெரிக்கா யுத்தத்தின் மூலம் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைனை கொல்வதற்கும் பாப்பரசர் தனது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் ஜோன் போல், சர்வதேச ரீதியில் ஏற்படும் நெருக்கடிகளை, நேரடியாக அல்லது தனது விசேட பிரதிநிதி மூலமாகவே கையாண்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில், முன்னாள் வத்திக்கான் இராஜதந்திரி கார்டினல் பையோ லாகி மூலம் சமாதானபூர்வமாக, ஈராக் விவகாரத்தைக் கையாளுமாறு ஜனாதிபதி புஷ்ஷை பாப்பரசர் கோரவுள்ளார்.



## மின் திட்டங்களை ஆரம்பிக்கும் கரு ஜெயசூரிய





# தமிழ்மக்கள் எதிர்கொண்ட துன்பத்தை முஸ்லிம் மக்கள் அனுபவிக்கக்கூடாது

## மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ்

(மட்டக்களப்பு)

சிங்களை அரசு தமிழ் மக்களை ஒடுக்குமுறைக்கு உட்படுத்தியதுபோல முஸ்லிம் சமூகத்தை நாம் ஒருபோதும் அடக்குமுறைக்கு உட்படுத்தமாட்டோம். அப்படியான திட்டம் எதுவும் எம்மிடம் இல்லை.

சிங்கள அரசின் அடக்குமுறைகளால் நாம் எப்படித் துன்பப்பட்டோம் என்பது எமக்குத் தெரியும். அப்படியான துன்பத்தை முஸ்லிம் மக்கள் அனுபவிக்கக்கூடாது.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வருடம் நிறைவையொட்டி கிழக்கிலங்கைச் செய்தியாளர்கள் சங்கம் ஏற்பாடுசெய்த வைபவத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே சிறப்புத் தளபதி ரமேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுக்கு - கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத் தலைவர் இரா.துரைரட்ணம் தலைமை தாங்கினார்.

இவ்வைபவத்தில் சிறப்புத் தளபதி ரமேஷ் தொடர்ந்து பேசும்போது, எமது விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம் மக்கள் எமக்கு வழங்கிய ஆதரவை நாம் இன்றும் மறந்துவிடவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மருத்துவப் பொறுப்பாளர் வாமன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், மனோகணேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.




## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையிடம் 1979 - 07 - 01



தெய்வத்திடம் 1996 - 03 - 03

### செல்வன் மகேந்திரன் பிரேமானந்

எம் செல்வமே! ஏழாண்டுகள் சென்றதையா
எப் பிறவியில் உங்களைக் காண்போம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

26/2A, 3ம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை.

பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.



ராஜா யாழ்ப்பாணம்.

கடைசி சில தினங்கள்



விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

வசீகரா

10.30, 2.30,

இன்று முதல் 5 ஆம் திகதிவரை

TOM CRUISE
MISSION IMPOSSIBLE 2
M.I.2 அஞ்சாநெஞ்சன்
இரவு 7.00, 9.30 மட்டும்.

(சி-628)

நிறஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

அஜீத், மாளவிகா நடித்த

உன்னைத்தேடி

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

U 571

(சி-627)


## இன்றைய நாள் இனிய நாள்

### 03-03-2003 - திங்கட்கிழமை

- **மேடம்** :- காரிய அனுகூலம், நன்மதிப்பு, புதிய சிநேகம், அதிகார வெற்றி, குடும்ப சுகம்.
- **இடபம்** :- பயனற்ற பிரயாசம், மனக்கவலை, பிரயாண கஷ்டம். பொருட்சேதம்.
- **மிதுனம்** :- தேகமெலிவு, அதிக செலவு, வீண்பழிகேட்டல், இல்லச் சிறப்பு, காரிய வெற்றி.
- **கர்க்கடகம்** :- வாக்கு கலகம், குடும்ப மனஸ்தாபம், அமைதியின்மை, பிரயாணக் கஷ்டம்.
- **சிங்கம்** :- வயிறு - மார்பில் வலி, கோபமிகுதி, தனதானிய விருத்தி, பலவழிகளாலும் செலவுகள்.
- **கன்னி** :- வாக்கு வசீகரம், இல்லச்சிறப்பு, நன்மதிப்பு, பொதுசன மதிப்பு, பூமிலாபம்

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

- **துலாம்** :- வாக்குக் கலகம், இனசன விரோதம், பெண்களால் நன்மை, பிரயாண மூலமான செலவு.
- **விருச்சிகம்** :- வாகன லாபம், சத்துரு வெற்றி, சரீர பல குறைவு, தனலாபம், விஷப்பயம்.
- **தனு** :- பெரியோர் மதிப்பு, குடும்ப மனஸ்தாபம், பிரயாசமிகுதி, சிநேகிதரால் கவலை.
- **மகரம்** :- காரிய வெற்றி, இல்லச் சிறப்பு, சிநேகலாபம், பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி.
- **கும்பம்** :- உடற்சோர்வு, பிரயாணம், நேத்திர ரோகம், நினைத்த காரியத் தடை, திருடர் பயம்,
- **மீனம்** :- சிநேக நன்மை, சுபானுபவம், காரிய வெற்றி, வாக்கு வசீகரம், இல்லச் சிறப்பு

# சிறானின் செயற்பாடுகளுக்காக உலகவங்கி முற்பணம் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் உடனடி மனிதாபிமான புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக உலகவங்கி முற்பணம் வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி பகுதிகளில், உடனடியாக மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்குப் பல்வேறு நாடுகள் உறுதி வழங்கியுள்ளன.

எனினும், இதுவரை அந்த உதவிகள் கிடைக்கப்பெறவில்லை. இதனால் மேற்படி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்ந்தும் தாமதமாகி வருகின்றது.

கிளிநொச்சியில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற "சிறான்" கூட்டத்தின்போது, வட-கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான - புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான நிதியம் உத்தியோகபூர்வமாக உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான உடன்பாட்டுக் கடிதங்களிலும் உலக வங்கியும், அரசும், விடுதலைப் புலிகளும் ஒப்பமிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து எதிர்காலத்திலேயே உதவிவழங்கும் நாடுகள் மேற்படி நிதியத்திடம் தமது நிதி உதவிகளை வழங்கவிருக்கின்றன.

இன்றையநிலையில் மேற்படி நிதியத்திடம் எவ்விதநிதியும் கைவசம் இல்லை. இதனாலேயே உலகவங்கி முற்பணமாகத் தேவையான அளவு நிதியை வழங்குவதற்கு முன்வந்திருக்கிறது.

எனவே, தற்போது தாமதமாகி வரும் வட-கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான - புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(க)

## இடைத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி

சாத்தான்குளம் சட்டப்பேரவை இடைத்தேர்தலில் ஆளும் அ.தி.மு.க வெற்றிபெற்றுள்ளது.

அக்கட்சியின் நீலமேகவர்ணன்- காங்கிரஸ் வேட்பாளர் மகேந்திரனை 17 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்திருக்கிறார். இத்தேர்தலில் போட்டியிட்ட ஏனைய சுயேட்சை வேட்பாளர்கள் அனைவரும் கட்டுப்பணத்தை இழந்துள்ளனர்.

## கலைப்பீட மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கலைப்பீட முதலாம் வருட மாணவர்கள் அனைவரையும் இன்று நண்பகல் 12 மணிக்குக் கைலாசபதி கலையரங்கில் ஒன்றுகூடுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## 'உப்பில் உறைந்த உதிரங்கள்' மார்ச் 8 ஆம் திகதி வெளிவருகிறது

சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8 ஆம் திகதி நிதர்சனம் மகளிர் பிரிவினரின் தயாரிப்பில் உருவான 'உப்பில் உறைந்த உதிரங்கள்' என்ற திரைப்படம் வெளியிடப்படவுள்ளது.

கடற்புலிகளின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்தத் திரைப்படத்தைக் குயிலினி இயக்கியுள்ளார். கடலில் காவியமான கடல் மறவர்களுக்குச் சமர்ப்பணமாக வெளிவரவுள்ள இத்திரைப்படம் - மார்ச் 8 ஆம் திகதி திரையரங்குகளில் திரையிடப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

## கூட்டமைப்பு எம்.பிக்கள் பாலாவை சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்- விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையிலான சந்திப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கிளிநொச்சியிலுள்ள அரசியற்துறை நடுவகப் பணியகத்தில் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

இது தொடர்பான அழைப்புக் கடிதங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைத்திருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலைமை- சமாதானப் பேச்சுக்கள், விடுதலைப் புலிகளும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் இணைந்து அரசியல் நகர்வுகளை முன்னெடுப்பது உள்ளிட்ட பல விடயங்கள் இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சமாதான முயற்சிகள் மிகக் கடினமானது; அர்ப்பண சிந்தையும், நம்பிக்கையும் அவசியம்!

### பிரதமர் ரணிலிடம் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம்



இலங்கையில் அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டுள்ள சமாதானப் பேச்சுக்களை இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் பாராட்டியுள்ளார்.

நான்கு நாள் விஜயமாக இந்தியா சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புதுடில்லியில் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமைச் சந்தித்துப் பேச்சுநடத்தினார். இதன்போதே, அப்துல் கலாம் சமாதான முயற்சிகளுக்குத் தமது பாராட்டைத் தெரிவித்துக்கொணடார்.

அத்துடன், இலங்கையுடனான உறவுகள் மேலும் நெருக்கமடைவதற்கு, இருநாடுகளுக்கும் இடையிலான தரைவழித் தொடர்புகளை ஏறபடுத்தக்கூடிய பாலம் அமைக்கப்படவேண்டும். பால நிர்மாணம் பூர்த்தியடைந்தால் உறவுகள் மேலும் நெருக்கமடையும்.

இவ்வாறு தெரிவித்த இந்திய ஜனாதிபதி, சமாதான முயற்சிகளை மேற்கொள்வது கடினமான விடயம் என்றும், இதற்கு அர்ப்பணசிந்தையும், அமைதி குறித்த நம்பிக்கையும் அவசியம் எனத் தெரிவித்தார்.

இத்தகைய சவால்களை எதிர்கொண்டு, சமாதான முயற்சிகளில் இருதரப்பும் ஈடுபடுவதையும் அவர் பாராட்டியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அமைச்சர் மிலிந்த மொறகொட, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், பிரதமரின் மேலதிகச் செயலாளர் சமன் அதாவுடஹெட்டி, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க ஆகியோரும் இந்திய ஜனாதிபதியைச் சந்தித்திருந்தனர்.

### பளைக் கோட்டத்தில் ஆசிரியப் பற்றாக்குறை

பளைக் கல்விக்கோட்டத்தில் ஆசிரியப் பற்றாக்குறை நிலவுவதாக வலயக்கல்வி அதிகாரி ப.அரியரத்தினம் தெரிவித்தார்.

138 ஆசிரியர்கள் தேவையாக உள்ளபோதும் 73 ஆசிரியர்கள் மாத்திரம் இங்கு கடமைபுரிவதாகவும், இதனால் மாணவர்களது கல்வி பெருமளவில் பாதிப்படைவதால், இதற்குரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

## காங்கேசன் கடலில் கைதான ஆறு மீனவர்களுக்குப் பிணை

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடித்ததாகக் கூறி, கடற்படையினரால் ஆறு மீனவர்கள் கைது செய்யப்பட்டு, மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வடமராட்சியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற ஆறு மீனவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். காங்கேசன்துறை அதியுயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் மீன்பிடித்ததாகக் கூறியே கடற்படையினர் இவர்களைக் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

காங்கேசன்துறைப் பொலிஸார் ஆறு மீனவர்களையும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது அவர்களைப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார்.




கியூடெக் அமைப்பின் அனுசரணையுடன் மதுபோதையிலிருந்து விடுபட்ட குடும்பங்களுக்கான, மதுபோதை தவிர்ப்பு விழிப்புணர்வுக் கலந்துரையாடலில் பங்குபற்றிய டாக்டர் சிவதாஸ், அருட்திரு வின்சன் பற்றிக், உளவளத் துணையாளர் நந்தலாலா, கதிர்காமநாதன், மதுபோதை தவிர்ப்பு இணைப்பாளர் பிரிட்டோ, கியூடெக் இயக்குநர் அருட்திரு ஜெயக்குமார், இணைப்பாளர் யோசப் பாலா மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

## ஜே.வி.பியுடனான கூட்டணியை எதிர்க்கும் சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் நீக்கம்!

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் பதவிகளிலிருந்து பதினொரு பேரை நீக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நெருக்கமான மூவர் கொண்ட குழுவே- பதினொரு அமைப்பாளர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான சிபார்சுகளைக் கட்சியின் செயலாளரான மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்துள்ளது.

இந்தப் பட்டியலில் முன்னாள் அமைச்சர்களும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களுமான எ.எச்.எம். பௌசி, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திர, றிச்சர்ட் பத்திரன ஆகியோரும் உள்ளடங்குவதாகத் தெரியவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டு அமைவதை இவர்கள் எதிர்த்து வருவதாலேயே அமைப்பாளர் பதவிகளில் இருந்து இவர்கள் நீக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

## சிங்களம் மட்டும் சட்டத்தின் பாதிப்பு இன்றுவரை தொடர்கின்றது!

1956 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தின் பாதிப்பு இன்றுவரை தமிழ்மக்களால் எதிர்கொள்ளப்படுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராஜகுகனேஸ்வரன் தெரிவித்தார்.

இப்போது சிங்களம் மட்டும் சட்டம் அமுலில் இல்லை. தமிழுக்கு அரசகருமமொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அரச திணைக்களங்கள் இன்னமும் சிங்களத்திலேயே தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

தமிழ்மொழிக்குரிய இடம் வழங்கப்படவில்லை. கடிதங்கள் சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்களான எமக்கும் இதேநிலைதான் இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## காங்கேசன்-திருமலை துறைமுகங்கள்; கண்காணிப்பை அதிகரிக்க உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மற்றும் திருகோணமலைத் துறைமுகப்பகுதிகள் மற்றும் வட-கிழக்குக் கடலோரப்பகுதிகளில் கடற்படையின் கண்காணிப்பைத் தீவிரமாக்கும்படி கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, கடற்படையினருக்கு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் வட-கிழக்குப் பகுதி கடற்படைத் தளங்களுக்கு நேரில் விஜயம்செய்து நிலைமையை ஆராய்ந்த பின்னரே, கடற்படைத் தளபதி- வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்திய கடற்படைக் கட்டளை அதிகாரிகளுக்கு இந்த விசேட உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

குறிப்பாக, வடக்கில் காங்கேசன்துறைமுகம், கிழக்கில் திருகோணமலைத் துறைமுகம் என்பவனற்றின் பாதுகாப்பில் விசேடகவனம் செலுத்துமாறு கடற்படைத் தளபதி தயா சந்தகிரி உத்தரவிட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, இந்தியாவுக்குச் சென்றிருந்த கடற்படையின் நடவடிக்கை இயக்குநர் றியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான கடற்படை அதிகாரிகள் குழு, நாடு திரும்பியிருக்கிறது.

இக்குழுவினர் இந்தியாவில் தங்கியிருந்தபோது, இருநாட்டுக் கடற்படையினரும் இணைந்து தொடர் கடற்கரைக் கண்காணிப்புக்களை மேற்கொள்வது மற்றும் கூட்டுப்பயிற்சி என்பன போன்ற விடயங்கள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

## திருக்கேதீஸ்வரத்தில் ஒரு இலட்சம் மக்கள்!

சரித்திரப் பிரசித்திபெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மகா சிவராத்திரி விழாவில், ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டதாகத் தெரியவருகின்றது.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெருமளவிலான பக்தர்கள் இம்முறையே திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்குச் செல்லமுடிந்தமை குறிப்பிடத்தக்கது. சிவராத்திரி விழாவையொட்டி திருக்கேதீஸ்வரத்தில் சிறப்பு வழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

# தவறான வகையில் 'பொடா' பயன்பாடு; தமிழக அரசு மீது மத்திய அரசு வழக்கு!

தமிழகத்தின் 'பொடா' சட்டம் தவறானமுறையில் பயன்படுத்தப்படுவதாகக்கூறி மத்திய அரசு உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளது. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ மற்றும் எட்டுப் பேரைத் தமிழக அரசு பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாக இவர்கள் மீது தமிழக அரசால் பொடா சட்டத்தின் கீழ் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கென அறிமுகப்படுத்தப்பட்ட பொடா சட்டத்தை, தமிழக அரசு தனது அரசியல் விரோதிகளுக்கு எதிராகப் பயன்படுத்தி வருவதாகவும் மத்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது.

தமிழக அரசு பொடா சட்டத்தைத் தவறானமுறையில் பயன்படுத்தி வருகின்றது என்று தமிழக அரசுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்படவுள்ள வழக்கில், அரசாங்கத்தின் சார்பில் பிரபல சட்ட நிபுணர் சோலி சொராப்ஜி ஆஜராவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வைகோவுக்கு எதிராகத் தமிழக அரசு பொடா சட்டத்தைத் தவறாகப் பிரயோகித்திருப்பதாகத் தி.மு.க. தலைவர் கருணாநிதி அண்மையில் மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் இருவர் காயம்

இருவேறு இடங்களில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற விபத்திக்களின் போது காயமடைந்த இரு இளைஞர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம், அச்சுவேலிப் பகுதியில் வேகமாகச் சென்றவேளை, கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் கொக்குவில் உடையார் வீதியைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் வினோதன் (வயது 21) என்பவரும், புத்தூர் சந்தியில் - நாய் குறுக்கே சென்றதால் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் கொடிகாமத்தைச் சேர்ந்த செல்லத்துரை சுரேஷ்கண்ணா (வயது 20) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரு


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் : அ. காருக்ஷி

முகவரி: 7, வேலப்பர் லேன், அரியாலை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்


# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 33

- ச. ஆ. கோபாலமூர்த்தி.

முடிவாக...

இக்கட்டுரையின் வாயிலாக நீரிழிவு நோயாளரும், நீரிழிவு நோயாளர் அல்லாதோரும் நீரிழிவு பற்றி நன்கு அறிந்திருப்பர். நீரிழிவு நோயாளர் அல்லாதோர் நீரிழிவை ஏற்படுத்தக்கூடிய காரணிகளை அறிந்ததால், அவற்றைத் தவிர்த்து வாழ்வதன் மூலம் நீரிழிவின் வருகையைத் தடுக்க அல்லது தாமதிகத் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்வர் எனவும், நீரிழிவு நோயாளர் தமது நோயைக் கட்டுப்படுத்துவதற்குச் செய்யவேண்டியவற்றைச் செம்மையாகச் செய்வர் எனவும் எதிர்பார்க்கிறேன். எனினும், பொதுவாக எல்லோரும் கடைப்பிடிக்கவேண்டிய சில விடயங்களைத் தொகுத்துக் கூறுவது ஆரோக்கியமான சமுதாயம் அமைவதற்கு உதவும் என்பதனால் அவற்றைத் தொகுத்துரைத்து இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

பகோடா, முறுக்கு, மிக்சர் போன்ற நொறுக்குத்தீனிகளைத் தயாரிப்பவர்கள் இவற்றைப் பொரிக்கும்போது, வற்றும் எண்ணெயை ஈடுசெய்வதற்கு மேலதிகமாக எண்ணெய் சேர்த்துச் சேர்த்துப் பயன்படுத்துவார்கள். தொடர்ந்து பொரிப்பதால் செறிவு கூடிவிட்டது, உடலுக்குக் கேடு பயக்கக் கூடியது என்று பயன்படுத்திய எண்ணெய்யைக் கழிப்பதில்லை. எனவே, செறிவு மிகுந்த எண்ணெய்யில் விற்கப்படும் நொறுக்குத் தீனிகளைக் குறைவாகவே உண்ணவேண்டும். உப்புச் செறிவுமிக்க, கருவாடு, ஊறுகாய் போன்றவற்றையும் குறைவாகவே உண்ணவேண்டும். வைத்தியர் தவிர்க்குமாறு கூறிய எதையும் உண்ணலாகாது. உருளும் தன்மையுடையனவான அப்பிள் பழங்கள், சாக்கடைகளுக்கு அருகில் வைத்தும் விற்கப்படுகின்றன. இவை சாக்கடைகளுள் விழமாட்டா என உறுதிகூறமுடியாது. அவ்வாறு வீழ்ந்த பழங்கள் சுமாராகக் கழுவியபின் விற்கப்படமாட்டாது எனவும் உறுதிகூறமுடியாது. இத்தகைய அப்பிள் பழங்களின் குழிந்த பகுதிகளுள் அசுத்தங்களும், கிருமிகளும் இருக்க வாய்ப்புண்டு. எனவே, அப்பிள் பழங்களை ஓடும் நீரில் நன்கு கழுவியபின் (நாலு பகுதிகளாக) நெடுக்கு முகமாக வெட்டி, அதன் குழிவான பகுதிகளிலிருக்கும் தோலைக் கவனமாக அகற்றிய பின்னவே உண்ணவேண்டும். நிலத்தில் வீழ்ந்த தென்னோலைகளின் ஈர்க்குகளில் அசுத்தங்கள் இருக்க வாய்ப்பு இருப்பதால், அவற்றை நாக்கு வழிப்பதற்கு உபயோகிப்பதைத் தவிர்த்து, நாக்கு வழிக்கும் மட்டையால் (**TONGUE CLEANER**) அல்லது பற்தூரிகையாலேயே நாக்கை வழிக்கவேண்டும்.

பல் இடைகளில் உணவுத் துணிக்கைகள் சிக்கினால், ஊசியால் அவற்றை எடுக்க முயற்சிக்க வேண்டாம். பல்நூல் (**FLOSS THREAD**) மூலம் கவனமாக எடுப்பது பாதுகாப்பானது. பல் டாக்டரிடம் செல்வது மிகவும் பாதுகாப்பானது. பாரமான மூக்குக் கண்ணாடி அணிபவராயின் மூக்கில் அதன் பாரத்தால் புண் ஏற்படுவதைத் தவிர்க்கப் பிளாஸ்ரிக் கண்ணாடியைப் பயன்படுத்தல் நன்று.

சுட்டாறிய நீரையே பருகுங்கள். அதிக சூடுடைய பானங்கள் தொண்டையில் புற்றுநோயை ஏற்படுத்தலாம் எனக் கூறப்படுவதால், ஓரளவு சூடுடைய பானங்களையே பருகுங்கள். குளிரூட்டியில் தண்ணீரை வைத்து, அதிக குளிருடன் குடிப்பது தொண்டை நோய்களை ஏற்படுத்தும் எனக் கூறப்படுவதால், குளிரூட்டியிலிருந்து தண்ணீர்ப் போத்தலை வெளியே எடுத்துச் சிறிதுநேரம் வைத்து, குளிர் ஓரளவு நீங்கியபின் பருகுங்கள். வண்ணத்துப்பூச்சியின் முட்டைகளிலிருந்தே தொல்லைதரும் மயிர்க்கொட்டிகள் உருவாவதால், வண்ணத்துப்பூச்சிகளை அழிப்பது, மயிர்க்கொட்டிகள் தோன்றாமல் தடுக்கும் ஒரு நடவடிக்கையாக அமையும்.

*தொடரும்.....*




நமது ஈழநாடு வழங்கும்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: என்.எஸ். இரத்தினம்ஸ்

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

6, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.

ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிள்களின் வவுனியா விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்:

1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்யாட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர். பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**Fancy goods, gift items, fevicryl & acron paint items.**

ஐந்தாவது ஆறுதல் பரிசு

வழங்குவோர்: சிவ கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரியகடை, யாழ்ப்பாணம்.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை
அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'

நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------

வயது: ------------------------------

முகவரி: ------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# இனி அவரைத் தேவையில்லை

அந்தக் காட்டுவெளி இரவில் பேய், பிசாசு நடமாடும் இடமென்றும், அங்கங்கேயுள்ள பனங்கூடல்களிலும், மரத்தோப்புகளிலும் நடுச்சாமத்திலே கொள்ளி வாய்ப்பிசாசு உலாவும் வெளிச்சத்தைக் கண்டவர்கள் பேய், பிசாசு உண்டென்றும் பக்கத்துக் கிராமங்களிற் பேசிக் கொள்வர்.

துப் பல ஊர்களிலுமிருந்து வந்து குடியேறிய மக்கள்,பத்தே பத்து ஆண்டில் காடு மேட கற்றி, பசுங்களனிகளைப் படைத்து, கற் கோட்டைகள் போன்ற வீடு வாசல்களும் கட்டிக் கொண்டார்கள். சந்நியாசியாரின் குடியிருப்பமைந்த ஆலம் நிழலைச் சந்தியாகக கொண்டு நாலா திசையிலும் வீதிகளும், வீடுகளும்

**ச.வே.பஞ்சாட்சரம்.**



யாழ்ப்பாணக் குடாநாட்டுள்ளே மக்கள் குடியேறாமல் அரசாங்கத்துக்குச் சொந்தமாகக் கிடக்கும் பிரதேசங்களில் அதுவும் ஒன்று. இந்த நிலையில்தான் மாந்திரீகம் தெரிந்த சந்நியாசி பீதாம்பரம்- அந்தப் பெருவெளியின் நடுவிலே படர்ந்து நிற்பதும், முனியாடி ஆலமரம் என்று பெயர் பெற்றதும், இரவென்ன பகலென்ன ஆட்டுக்குக் குழைவெட்டுவோரும் அணுக அஞ்சுவதுமான அந்த ஆலமரத்தின் அடியில், விழுதுகளிலிருந்து அணில்கள் சத்தமிட, கிளைகளில் குருவிகள் சிறகடித்து ஆர்ப்பரிக்கத் துணிந்து குடியேறினார். அவர் அருளில் மயங்கிவிட்டவர்கள்போலப் பலர் அவரிடம் வந்து பணிந்து திரிந்து, அவர் ஊட்டிய துணிச்சலில் அவர் தங்கும் அந்த ஆலமரத்தடியைச் சூழ்நத பிரதேசத்தில் மனைவி மக்களோடு வந்துகுடியேறினர். சந்நியாசியாருக்கு ஆலடியிற் குடிசை கட்டிக்கொடுத்து, உணவளித்துப் பக்தி சிரத்தையோடு வழிபட்டும் வந்தார்கள். பார்த்துப் பார்த்

பெரியபுள்ளியாகிவிட்ட தென்னந்தோட்டச் சுந்தர மூர்த்தியின் பெயரைத் தழுவிச் "சுந்தரபுரம்" என்று பெயர் சூட்டப்பட்டுவிட்ட, அந்தப் புதுக்கிராமத்தில்- ஐக்கிய பண்டகசாலை, தபாற்கந்தோர், மருத்துவநிலையம், பள்ளிக்கூடம், சந்தை, கடை கண்ணிகள் என்பவற்றோடு கிராமசபையும் உருவாகிவிட்டது. நாளடைவில் தேடிவந்து வணங்குவோர், திருநீறு வாங்குவோர், உணவுபடைப்போர் குறைந்து- கண்ட இடங்களிலென்றாலும் கையெடுப்போர் குறைந்துவிட்ட சந்நியாசியார்- ஆலடிக் குடிசையில் அநாதையாகக் காலந் தள்ளி வந்தார். ஒருநாள் கிராமசபையிடமிருந்து அவருககு ஒரு கட்டளை பதிவுத்தபாலில் வந்தது.

"ஐயா, தாங்கள் தங்கியிருக்கும் ஆலமரத்தை வெட்டிவீழ்த்தி அகற்றி - சந்திக்கும், தெருக்களுக்கும் தார் ஊற்றுவதற்குச் சபை தீர்மானித்திருப்பதால், தங்கள் குடிசையை ஒருமாத காலத்துள் அப்புறப்படுத்திவிடும்படி இத்தால் அறிவிக்கிறோம்!" என்று அக்கடிதத்தில் இருந்தது.

# A-9 ஐ நீளும் நினைவுகள்



மூன்றாம் நாளோ விடிந்து மலர்கையில்
மூலைமுடுக்கு எங்குஞ் சடலங்கள்!
நீண்ட A-9 மாங்குளச் சந்தியில்
நெருப்பணைந்திட... எங்கும் பிணவெடில்!
பூண்ட அஸ்திரம் போட்டு... பறந்தனர்;
புன்னகைத்தன மண்ணிற் துவக்குகள்!
மாண்டிடாதவர் மரணத்துக் கஞ்சியே
மறைந்தனர் காட்டு இருளின் தயவினில்!
பகையுடன் சமராடியே மார்பினில்
பட்ட புண்ணுடன்.. புகழுடலாகிய
மகவுகள் பல தாய்மண் மடியினில்
மறைந்துகொண்டன! புண்பட்டு வேதனை
புக; துடித்திடும் புண்ணிய[illegible]
புளகிநின்ற காற்றின் பாய் வருடிற்று.
முகஞ்சிதைந்து கிடந்தமாங் குளஞ்சந்தி
மூச்சைப் பெற்று மெல்ல அனுங்கிற்று.
கண்டி வீதியை அண்டிய காட்டிடை
"கால்கள் மாறி" திரிந்த படைவீரர்
என்ன செய்வது என்று முழித்தனர்.
இடைக்கிடை சிலர் சண்டையில் வீழ்ந்தனர்.
கண்ணிழந்தவர் போலத் திரிந்தோரைக்
கஷ்டப் பட்டேனும் மீட்க முயன்றனர்....
அன்று ஆண்டவர்; ஆம் பல வீரர்கள்
அலைந்துலைந்தபின் வவுனியா சேர்ந்தனர்.

**- ஜெயங்கொண்டான்**

# மீள் குடியேறிகளின் கதை

## அல்லது

ஆழ்கடலின் கீழிருந்து
குளிரில் நடுங்கியபடி நிலவு வருகிறது
யுத்தம் ஓய்ந்திருக்கும்
அல்லது
தணிந்திருக்கும் இந்த நாட்களில்
காயங்கள் ஆறி
குருதிக்கறை நீங்கி
தயக்கமும் அச்சமும் கலைய
நிலவு எழுந்து வருகிறது
காயங்களும்
குருதிப் பெருக்கும்
பலியும் அடங்கி
கடலும்மெல்ல மெல்ல
நீலமாகி வருகிறது என்று சொல்கிறார்கள்.
வாழ்வைப் பொத்திக் காத்திடலாம்
என்றோடியவள்
காயங்களோடு திரும்புகிறாள்
இடம்பெயர்ந்தோர் 'காட்'
காணாமற்போனோர் பதிவட்டை
எலும்புக்கூடொன்றின்
துயருற்றும் புகைப்படம்
மரணச்சான்றிதழ்
தந்தையை இழந்த பிள்ளைகளுக்கான
அட்டைகள்
மீள்குடியேறக் கோரும் விண்ணப்பம்
நிகழ்காலத்தின் சருகடர்ந்த
பால்விழிகளோடு
மூன்று பிள்ளைகள்
இன்னும் இதயம் நிரம்பிய
துயரம் கோபம்
ஆற்றாமை எல்லாவற்றோடும்
ஒரு மீளக்குடியேறியாக
இன்னும் அகதியாக.
யுத்தம் பற்றி அவளுக்கதிகம்
தெரிந்திருக்கவில்லை
ஆனால் யுத்தம்
அவளின் மடியில் கிடந்தது
பலிகொள்ளும் சாபத்தோடு
ஒரு நீசக்குழந்தையாக
அவள் ஆறுவதற்கு மரங்களுமில்லை
குவிக்கப்பட்டிருந்த எலும்புக்கூடுகளில்
எது தன் கணவனுடையதென்று
காணமுடியாது தடுமாறினாள் ஒருநாள்
இன்றோ
இடித்தழித்து வெறுமையாக்கப்பட்டிருக்கும்
சூனிய வெளியில்
எது அவளுடைய வாழ்விசைந்த நிலமென்று
தெரியாதிருக்கிறாள்
இழந்த வாழ்வின் சிறுதுண்டேனும்
கைசேராதவென்றும்
எதிர்காலத்தின் முகம்
பீரங்கியின் குழல்வாயா
அல்லது
நிலவு அஞ்சாத கடல்வெளியா
என்றும்கூட.



கருணாகரன்

## எலும்புக்கூட்டின் மனைவி

# இலக்கியச் சோலை

## சந்திப்பும், நினைவுகளும்

1967 ஆம் ஆண்டு வீரகேசரியில் வாரந்தோறும் ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளைப் பேட்டிகண்டு வந்திருந்தேன்.

முதலாவதாக ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவரான சி.வைத்திலிங்கத்தைப் பேட்டிகாணச் சென்றிருந்தேன். அவரது வீடு தெகிவளைவில் இருந்தது. அவர் அப்பொழுது கொழும்பு மாநகரசபையில் கடமையாற்றிக்கொண்டிருந்தார்.

### சிறுகதை முன்னோடி மு.வைத்திலிங்கம்

வீரகேசரிப் புகைப்படம் எடுப்பவரையும், என்னையும்கண்டு- அவசர அவசரமாக "மறந்துவிட்டேன். நீங்கள் வருவீர்கள் என்று, கொஞ்சம் நில்லுங்கள்" என்று கூறிச் சொற்ப நேரத்தால் புகைப்படம் எடுப்பதற்கு ஆயத்தமானார். புகைப்படம் எடுத்த பின்பு, பேட்டியும் தந்தார்.

அக்காலத்தில் இக்காலம் போன்று சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாக, கலைத்துவமாகக் கதைகள் படைக்கும் சர்ச்சைகள் இல்லாத நேரம். அந்த நேரத்தில்கூட அவர் படைத்த கதைகள் சமுதாயப் பிரக்ஞையோடும், கலைத்துவத்தோடும் சிருஷ்டிக்கப்பட்டது.

'கங்காகீதம்' என்ற அவரது சிறுகதை வீட்டுக்குத் தானத்துக்கு வரும் துறவி ஒருவரை, அந்த வீட்டில் உள்ள இளம் பெண் மானசிகமாக, ஒருதலைப்பட்சமாக அவர்மேல் அன்பு செலுத்துவதை மையமாகக்கொண்டு அந்தக்கதை சிருஷ்டிக்கப்பட்டுளளது. 'பாற்சோறு' என்ற மற்றுமொரு கதையில்- ஒரு ஏழைச்சிறுவன், பாற்சோற்றுக்காக ஏங்கித்தவிப்பதை மிகவும் தத்ரூபமாகச் சிருஷ்டித்திருந்தார். இன்றும்கூட அக்கதைகள் காலத்தால் கரையாது: வாசகர்களை ஈர்க்கக் கூடியதாக அமைந்துள்ளது.

இவர் இந்தியாவிலிருந்து வெளி வரும் 'கலைமகள்' பத்திரிகையிலும் 'கிராம ஊழியன்' என்ற சஞ்சிகையிலும் எழுதியுள்ளார். இவர் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவரான இலங்கையர்கோனின் உறவினரும் கூட.

**- மணிசேகரன்.**

# பாலையும் சோலையும்

## கலாநிதி.சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

இன்றுபோல அன்று இணைப்பாடச் செயற்பாடுகளோ ( Co- curri cular activities), சுயதிறன் வெளிப்பாடுகளுக்கான வாய்ப்புக்களோ எமக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மையே.

ஆனால், பாடசாலை மண்டபத்தில் நடந்த சைவமாநாடுகள் என்னைப் பொறுத்தவரையில் மிகவும் பயன்பட்டன. செஞ்சொற் கொணடல் புரிசை முருகேசமுதலியாரின் பாரதத் தொடர்ப் பிரசங்கங்கள், திருப்புகழ் மணிஐயர், முருகதாஸ் ஆகியோரின் திருப்புகழ் இசைமாரிகள், சு.நடேசபிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சைவப்பெரியார் . க.சிவபாதசுந்தரனார், சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் போன்றோரின் தமிழ்ச் சொற்பொழிவுகள் என்பவறறை அந்தச் சிறுவயதிலே கேட்கக் கிடைத்தமை கிடைத்தற்கரிய பெரும்பேறு எனவே கருதுகின்றேன்.

நான் யாழ்.இந்துக் கலலூரித் தமிழ்ப் பாடசாலையிலே 1938 இல் இரண்டாம் வகுப்பிலே படிக்கையில்- ஆசிரியா க.முத்துக்குமாரு அங்கே பணியாற்றவந்தார். 1963 இல் நான் யாழ். இந்துக் கல்லூரியிலே உதவியாசிரியராய் வந்தபொழுது, அவர் தமது பாடசாலையின் அதிபராய்ச் சேவைபுரியக் கண்டேன். ஆசிரியசேவையில் இருபத்தைந்தாண்டு இடைவெளி என்பது பெரிதுபடுத்தப்பட வேண்டிய ஒன்றல்ல. ஆனால், எனக்கு அதிர்ச்சியும வியப்புந்தந்தது அவர் பயன்படுத்திய ஊற்றுப் பேனாதான்.



'Black Bird' எனப்படும் நீண்ட தடிபோன்ற அந்தப்பேனா, 1938 இற்போலவே வைலற்நிற மை நிரப்பப்பெற்று, முத்துக்குமாரு அவர்களால் பயன்படுத்தப்பட்டதைக் கண்டேன். அதே பேனை!!! அதேமை!: அதே கையெழுத்து.!!

அடுத்து.....?

வண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை, மெதடிஸ்த மிஷன் வித்தியாசாலை என்பவற்றில் தமிழ் யே.எஸ்.ஸி (கனிஷ்ட தராதரப் பத்திரச் சான்றிதழ்) எஸ.எஸ்.ஸி.(சிரேஷ்ட தராதரப் பத்திரச் சான்றிதழ்) கற்றுப் பரீட்சைகளுக்குத் தோற்றிச் (1944,1946) சித்தியடைந்தேன். தொடர்ந்து ஸ்டான்லி மத்திய கல்லூரியிலே ஆங்கில எஸ்.எஸ்.ஸி. (1946-1949) கற்றுத் தேறினேன்.

1944 இல் வீரகேசரி வாரஇதழில் எனது சிறுகதை (தியாகம்) வெளியாயிற்று. 1946 இல் மின்னொளி சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் நான் எழுதிய சிறுகதை முதற்பரிசு பெற்றது. 1948 இல் இலங்கை வானொலியில் எனது முதல் நாடகம் (கவிஞன் பலி) ஒலிபரப்பாயிற்று. நானும் என் நண்பர் சிலரும் (மதுரகவி இ.நாகராஜன், பாஷையூர் எஸ்.ஆபிரகாம், சோ.இராமச்சந்திர ஐயர்) அவ்வானொலி நாடகத்தில் நடித்தோம். ஸ்டான்லி மத்திய கல்லூரியில் கற்கும்போதே நான எழுதிய நாடகம் 'ஏழை படும்பாடு' நானே நெறியாண்டேன். என் சகமாணவர்கள் நடித்து மேடையேறியது. 1949 இல் ஈழகேசரியில் எனது நவனம் 'மலர்ப்பலி' தொடர்ந்து வெளியாயிற்று. 1945 இலிருந்தே என் சிறுகதைகள், நாடகங்கள் பலவும் ஈழகேசரியில் வெளியானதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

இவை பற்றிய செய்திகளை இரு அத்தியாயங்களில் விரிவாக எழுதியுள்ளேன். அவை என் நூலிலே இடம் பெறுகின்றன.

1950 இல் பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சிபெறத் தெரிவு பெற்றேன்.

அங்கு....

தொடரும்....

# கிழக்கும் மேற்கும் ★ ★ ★ ★




மார்ச் நடுநாளின் மறுநாள் ஸீஸர்
அரசியல் மன்றம் சென்றிட முனைந்தான்!
"கடந்த இரவு கெட்ட கனவுகள்
கண்டேன் " என்று கூறிய கல்பேணியா
"அரசியல் மன்றம் செல்ல வேண்டாம்" எனத்
தடுத்தாளாயினும் தடைகளை மீறி
அரசியல் மன்றம் விரைந்தான் ஸீஸர்!
அன்று எச்சரித்த மனிதனைக் கண்டதும்
"மார்ச் நடுநாள் வந்தும் என்னாச்சு?"....
என்று கேலியாய்க் கேட்டான் ஸீஸர்!
"மார்ச் நடுநாள் வந்ததென்றாலும் அது
முடியவில்லையே இன்னும்" என்றான் மனிதன்!
நண்பர்கள் சூழ்ந்திட மன்ற வாசலை
அடைந்த ஸீஸர், மண்டப வாசலில்
அமைந்துள்ள சிலையின் அருகினில் வந்தான்!
சதிகாரர் அனைவரும் ஸீஸரைச் சூழ்ந்தனர்!
ஸீஸரால் முன்னர் நாட்டினை விட்டு
விரட்டப்பட்ட ஒருவனின் உறவினன் -
விரட்டப்பட்டவனை மீண்டும் ரோமினுள்
வருவதற்கு அனுமதி வழங்கும் வண்ணம்
ஸீஸரி டத்தோர் விண்ணப்பத்தினை
நேரிலே கொடுத்திட முனைந்து நின்றான்!
அதனை ஏற்றிட மறுத்தான் ஸீஸர்!
அவ்வுற வினனுக்கு உதவுவார் போல
புரூட்டஸ் காஸியசுடன் அவ்விடம் வந்தான்!
இருவரும் அவனுக்காய் ஸீஸரி டத்தினில்
பரிந்து பேசியும் அவர்களின் பேச்சையும்
ஏற்றிட மறுத்தான் யூலியஸ் ஸீஸர்!
ஏற்றதோர் தருணம் இதுவென்று கண்ட
காஸ்க்கா தனது உடைவாளெடுத்து
ஸீஸரின் முதுகினில் குத்திடக் கண்ட ஸீஸரின்
நண்பனாம் புரூட்டஸ் விரைந்து
ஸீஸரின் முன்பக்கம் சென்று நின்றவன்
தன்னுடை வாளினை எடுத்து ஓங்கி
"ரோமின் பகைவன் வீழ்க" எனக் கூவி
ஸீஸரின் மார்பினில் குத்திடக் கண்ட
ஸீஸர் திகைப்புடன் "நீயுமா புரூட்டஸ்?"...
எனக் கேட்ட வண்ணம் நிலத்திடை வீழ்ந்தான்!
சில நொடிக் குள்ளே அவனுயிர் பிரிந்தது!
இருபத்து மூன்று குத்துக் காயங்கள்
ஸீஸரின் உடலில் காணப்பட்டன!
ஸீஸரின் நண்பர்கள் வழங்கிய "பரிசிதோ?"
ஸீஸரின் எதிர்நிற்கப் பயந்தோரின் "பரிசிதோ?"
"சுதந்திரம் வாழ்க" எனச் சிலர் கூவினர்!
"சமத்துவம் வாழ்க" எனச் சிலர் கூவினர்!!
"கொடுங்கோன்மை வீழ்க" எனச்சிலர் கூவினர்!
புரூட்டஸ் தன் குழுவுடன் மகிழ்ச்சியில் மூழ்கினான்!
ஸீஸரின் நண்பனாம் மார்க் அந்தோனி
ஸீஸரின் உடலினை அடக்கம் செய்திட
அனுமதி கேட்டிட ஏற்றிட்ட புரூட்டஸ்
மார்க் அந்தோனிக் கனுமதி வழங்கினான்!
அவைக்கு வந்ததும் அந்தோனி - ஸீஸரின்
உடலினைக் கண்டு கதறி அழுதான்!
அந்தோனி எழுந்து அவையினைப் பார்த்து
"ஸீஸரைப் புகழ்ந்து பேசநான் வரவில்லை!
அவரின் உடலினை அடக்கம் செய்யவே
இங்கு வந்துள்ளேன்" என்றவன் தொடங்கிப்
பேச்சுத் திறமையால் மக்களைத் தன்பக்கம்
சாய்ந்திடச் செய்ததோ டல்லாது அவர்களை
ஸீஸரைச் சதிசெய்து படுகொலை செய்த
அனைவர்க்கும் எதிராய்க் கிளர்ந்திடச் செய்தான்!
சினம் கொண்ட மக்கள் சதிகாரர்களின்
வீடுகள் தேடித் தீயிட்டு எரித்தனர்!
பழிக்குப் பழியெனப் பாய்ந்து சிதைத்தனர்!
ஆண்டுகள் சிற்சில வாழ்ந்ததன் பின்னர்
தன்னைத் தானே அழித்தான் புரூட்டஸ்!
ரோமின் மன்னனாய் ஸீஸர் இருந்திலன்!
ரோமரின் மனங்களில் மன்னாய் இருந்தான்!
நண்பனை நம்பியே அரசினை இழந்தான்!
நண்பனை நம்பியே மணிமுடி இழந்தான்!!
நண்பனை நம்பியே இன்னுயிர் இழந்தான்!
நம்மன்னன் சங்கிலி கிழக்கினில் அன்று!!
நண்பரை நம்பியே ஆட்சியை இழந்தான்!
நண்பரை நம்பியே ஆருயிர் இழந்தான்!!
நானிலம் போற்றிடும் மாபெரும் வீரனாம்
யூலியஸ் ஸீஸர் மேற்கினில் அன்று!!

குறிப்புக்கள் சில:-

மாமன்னன் சங்கிலி:- கி.பி.1515-1565
மாவீரன் ஸீஸர்-
மண்ணில் பிறப்பு:- கி.மு.100-07-12/13
மணிமுடி மறுப்பு:- கி.மு. 44-02-15
உயிர் பறிப்பு:- கி.மு.44-03-15
உடல் எரிப்பு:- கி.மு.44-03-19/20

(அடுத்தவாரம்- "புத்தர் - நியூட்டன்")

# மெல்லத் தமிழ் இனி...

மெல்லத்தமிழ் இனி
வளரும் - அது
சொல்லுந் தகவற்ற
சோதி ஒளியுடன் சுடரும்!
வெல்லும் வழியெலாங்
காணும் - பின்
விதவித ஏற்றங்கள்
கொள்ளும் - அதைக்
கொல்லும் வழிக்ளுமில்லை
கூடவே.....
குளிர்தமிழ் அழகுக்கு
எல்லையும் இல்லை
எல்லாம் தமிழென்றாச்சு.
ஏழு லட்சம் பேரிங்கு
இடம்பெயர்ந்தாச்சு.
அதனால்
எங்குந் தமிழென்றும் பேச்
கல்லும் எழாக்காலந்
தொட்டு - இங்கு
கால் கொண்ட போதிலுங்கூட
நில்லா இளமையை
நிறுத்தி
நிரந்தர கன்னிமை
தான்கொண்டு நின்றாள்.



சொல்லில் உயர்வு
இவள் என்றே
ஒரு சோர்விலாக்கவிஞன்
பாட
தொல்காப்பியமும்
சிலம்பும் சூடி
சூழ்திட்ட உலகெலாம்
தன்வசங் கொண்டாள்.
இன்றும் இளைத்தாள்
இல்லை.
இந்தக் காலத்தின்
போக்கொடு ஓடவுங்கற்றாள்
"பதமி"யும் "குறளும்"
திணையும்
பதமான "அம்பலமும்" சேர
வென்றாள் கணினித்தளங்கள்!
அவள்
பொன்தாள் யுகங்களைக்
கடக்கும் - புதுப்
பொலிவொடு புகழினைப்
பூக்கும் - அதனால்
மெல்லத்தமிழ் இனி.....

- ச.சாரங்கா.

# உன்னுடைய பிரசன்னம்



உன்னுடைய பிரசன்னத்தில்
எனது பெயரை
மீளக் கண்டுகொண்டேன்.
காய்ச்சல் திரையிட்டிருக்காத
கண்களை
மீளக்கண்டு கொண்டேன்.
நேற்றைய உறைபனிகளுக்கு
அப்பாலிருந்த
ஆபிரிக்காவை
உன்னுடைய சிரிப்பே
வெளிப்படுத்திக் காட்டியது
பத்து வருடங்கள்
என் அன்பே
மாயைகள்...
சிதறடிக்கப்பட்ட எதிர்பார்ப்புக்கள்...
நிறைந்த நாட்களாலும்
மதுவினால் அமைதியிழந்து போன
தூக்கத்தாலும்
நாளையின் சுவையை
இன்றையின் மேல் சுமத்திவிட்ட
துன்பங்களாலும்
நிறைந்துபோயிருந்தன
கட்டற்ற ஆறாக
அது
அன்பை பெருகவைத்திருக்கிறது
உன்னுடைய பிரசன்னத்திலே
என் குருதியின் நினைவுகளை
மீளக் கண்டுகொண்டேன்
இனி வரப்போகும்
எம் நாட்களின் கழுத்தில்
சிரிப்புக்கள் இழைத்த
ஆரம் தொங்குகிறது.
புதிய மகிழ்ச்சிகளால்
அந்த நாட்கள்
பொங்கித் ததும்பும்.

**செனகல் நாட்டுக் கவிதை**

ஆங்கிலத் தலைப்பு:-
Your Presence
எழுதியவர்:-
டேவிட்ட டியொப்
தமிழில்:- வின்சென்ற்
புளோறன்ஸ்.

# கவிஞர் முருகுவின் "மனிதர்கள்"



கவிஞர் முருகு அவர்களின் 'மனிதர்கள்' கவிதைத் தொகுதி வாஹினி வெளியீடாக வெளிவந்துள்ளது. முதுபெரும் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களால் முன்னுரை வழங்கப்பட்டுள்ளது. அர்த்த புஷ்டியான அட்டைப்படம் ஓவியர் ஆசை.இராசையா அவர்களால் வரையப்பட்டுள்ளது. 132 பக்கங்களைக்கொண்ட இக் கவிதைத்தொகுதியில் 100 இற்கு மேற்பட்ட கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

கவிஞர் முருகு இலக்கிய உலகிற்குப் புதியவரல்ல. இலக்கியப் பரப்பில் இவருக்குச் சிறுகதை எழுத்தாளரென்ற பதிவும் உண்டு. இருநதாலும் கவிதைத்துறையிலேயே இவரது முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதை, இதற்குமுற்பட்ட இவரது வெளியீடுகள் மூலம் உணரக்கூடியதாகவுள்ளது.

கவிஞர் முருகுவைப் பற்றிக் கூறும்போது- அதிகம் எழுதாமல், அர்த்த புஷ்டியாக எழுதிப் பிரபல்யமானவர் என்பதைக் கண்டிப்பாகக் கூறவேண்டும்.

பொதுவாகவே கவிஞர்களிடம் கூடுதலாக உணர்ச்சிவசப்படுகின்ற தன்மையுண்டு. இதில் தவறொன்றுமில்லை. ஆனால், இந்த உணர்ச்சிகளையும் திட்டமிடப்பட்ட ஒரு வாய்க்காலில் வடியவிடுவதில் சிறப்புண்டு என்பதில் யாருக்குமே கருத்து முரண்பாடிருக்க முடியாது. இன்று பிரசுரமாகும் கவிதைகளை நோக்கும் போது அறிவியலுக்கு மேலால், உணர்வியல் மேலோங்கி- மானசீகமானதும், புனிதமானதுமான ஒரு உலகையும், மனிதனையும் வேண்டிநிற்கின்ற ஒரு பண்பை அவதானிக்க முடிகின்றது. இது தவறானதல்ல. ஆனால், நமக்குமுன் வாழ்ந்த கவிஞர்களின் கருத்துக்களைக் கண்மூடித்தனமாகக் கேலிசெய்வது போன்ற உணர்ச்சி வெளிப்பாடுகளில் உடன்பட்டுப்போக முடியாதுள்ளது. கவிஞர் முருகுவின் கவிதைகளில் இதுவரை கூறப்பட்ட கவிதை வெளிப்பாடுகளை உள்வாங்கி, கருச்சிதைவு செய்யாமல் புது மெருகோடு படைக்கின்ற தன்மையைக் காணக்கூடியதாகவுள்ளது.

## நூல் அகம்

சமகாலக் கருத்து வெளிப்பாட்டின் அவசியம் பற்றித் தற்போதுளள கவிஞர்கள் கூடியகவனம் செலுத்துகின்றனர். இதில் எனக்கும் உடன்பாடுண்டு. ஆனால், கருத்துக்களைச் சமூகத்திலிருந்து பிரித்தெடுத்து, தனிப்பிரச்சினையாக்கிவிடுகின்ற முயற்சிகளாகவே பெரும்பாலும அவைகள் தென்படுகின்றன. கவிஞர் முருகுவின் கவிதைகளில் வாழ்வியல், சமூகவியல், அரசியல் சார்ந்த கருப்பொருள்கள் மிகத் தெளிவாக அமைந்துள்ளன.

"கடல் நீர் சலனம் அடைவதேன்
நீரைக்காற்று அலைப்பதால்
உடலில் புலன்கள் கிளர்வதேன்
ஆசைக்காற்று அலைப்பதால்"

வாழ்வியலின் ஆணிவேரின் குறுக்குவெட்டு முகத்தை மிகவும் இலகுவாகவும், தெளிவாகவும் கவிஞர் முருகு வெளிப்படுத்தியுள்ளார்.

"கடந்த காலத்தின்
அடிச் சுவடுகள்
எதிர்காலத்தின்
படிக்கற்கள்
நடந்த போரின்
விழுப்புண்கள்
வரும் போரின்
கவசங்கள்"

வாழ்வியல் தத்துவத்தைச் சீரழிக்காமல் சமகாலத்தை மிகவும் ஆழமாகவும், அழகாகவும் கவிஞர் முருகு எடுத்துக்கூறியுள்ளார் - வாழ்வியல் தத்துவத்துவதத்திற்கும், போரியல் தத்துவத்திற்குமிடையில் முரண்பாடற்ற முறையில், மிகவும் லாவகமாகவே கவிஞர் முடிச்சுப் போட்டுள்ளார். வாசகனின் தோளில் சிலுவையை ஏற்றித் திணறடிக்க வைக்கின்ற வித்துவக் கோலோச்சும் பண்பைக் கவிஞர் முருகுவின் கவிதைகளில் காணமுடியாது.

"வாழ்ந்து பார்த்த மலர் - மண்ணில்
வீழ்ந்து கிடக்கின்றது
வாழ்வின் தத்துவமே - அதனில்
ஆழ்ந்து கிடக்கின்றது"

இக்கவிதையில் சிறப்பான, கவர்ச்சியான, இலகுவான மொழியாட்சியோடு, கவிஞரால் கூறப்படுகின்ற கருத்துக்கள் நமது மனதில் வீழ்ந்து மன அலைச்சலின்றி, நமது நாடிநரம்புகளில் கலப்பதை உணரக்கூடியதாகவுள்ளது.

இக்கவிதைத் தொகுதியின் இறுதியாக அமைந்துள்ள 'பாத்துமிகள்' எனற தலைப்பின் கீழ் அமைந்துள்ள கவிதைகளில் 'தர்மத்தின்' துடிப்பு வெளிப்படையாகவே தெரிகின்றது. நான்கு அடிகளைக்கொண்ட ஒவ்வொரு கவிதையிலும் பிரச்சினையைக் கூறுகின்ற தெளிவு - பிரச்சினைக்கான தீர்வைக் கூறுவதிலும் அதே தெளிவு அமைந்திருப்பது மெச்சத்தக்க அம்சமாகும்.

சமுதாயத்தின் மூலை முடுக்கெல்லாம் கவிஞரின் பார்வை ஊடுருவி இருப்பதையும், பார்வைக்குட்பட்டவைகளுக்கூடாகத் தனிமனித சமுதாய - அரசியல் - தேசிய விடயங்கள் சார்ந்த நீதிகளைச் சுட்டிக்காட்டுவதிலும் கவிஞர் முருகு தனித்துவத்துடன் நிற்கின்றார்.

"உழைப்பவர் பின்னாலே
உலகமே திரளுது
உழைப்பவர் வாழ்க்கை
இன்னுமேன் இருளுது"

"ஆசையை அடக்கினேன்
அற்புதன் என்றனர்
ஆசைக்குள் அடங்கினேன்
அற்பன் என்றனர்"

"கல்லுடன் கல்லை
உரசிடப் பொறிவரும்
சொல்லுடன் சொல்லை
உரசிடப் பொருள்வரும்"

மேற்தரப்பட்ட அமைப்பில் ஏறத்தாழ இருபத்தைந்து கவிதைகள் இடம்பெற்றுள்ளன. தனித்துவமான இப்பகுதி, தனித்தொகுதியாக, வெளிவந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது என்கருத்து.

மொத்தத்தில் கவிஞர் முருகுவின் 'மனிதர்கள்' கவிதைத் தொகுதிக்குள் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடிநாதமான 'மனிதம்' நிறைந்திருக்கின்றது.

**கே.ஆர்.டேவிட்**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
செய்வன திருந்தச் செய்!
- தமிழ் முதுமொழி

# நமது நோக்கு

## சுயாதீனம் வேண்டும்!

நெடுந்தீவுச் சம்பவத்தைத் தொடர்ந்து - விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட - போர்நிறுத்த ஒப்பந்தத்தில் மாற்றங்கள் உள்ளடக்கப்பட வேண்டியதன் தேவையை 'கைதிகள் விடுவிப்பு' விவகாரம் இன்னும் வலியுறுத்தியிருக்கிறது.

விடுதலைப் புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் இராணுவச் சிப்பாய் ஆகியோரை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அரசாங்கத் தரப்பு, திருமலையில் வைத்துக் கைதாகிய தமது ஆறு போராளிகளையும் விடுவிக்கும் பட்சத்தில் - தாமும் படையினரை விடுவிப்பது தொடர்பாக கவனம் செலுத்தத் தயாரென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதுபற்றிக் கண்காணிப்புக் குழுவிடமும் விடுதலைப் புலிகளால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால், கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவரோ - திருமலையில் கைதான ஆறு போராளிகளையும் விடுவிக்குமாறு, விடுதலைப் புலிகள் கோருவது நியாயமற்றதெனவும் - அவர்கள் நீதிமன்ற சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களாவர் எனக் கருத்துத் தெரிவித்துள்ளதுடன்,

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும், இராணுவச் சிப்பாய் ஒருவரையும் விடுதலைப் புலிகள், சட்டவரம்புக் குட்படாது தடுத்து வைத்திருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முரணானது. எனவே, இவர்கள் இருவரையும் புலிகள் விடுதலை செய்ய முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,

போர்நிறுத்த உடன்படிக்கையை மீறியமைக்காக- தமிழீழ நீதித்துறையின் சட்ட நடைமுறைகளுக்கமையவே படையினர் இருவரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும், தமிழீழ நீதித்துறையின் சட்ட நடைமுறைகளுக்கேற்ப அவர்களை விடுவிப்பதற்கான சாத்தியமான முயற்சிகளைத் தாம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டதாகவும் கூறியுள்ளார்.

அதேவேளை - திருமலையில் கைதான ஆறு போராளிகளையும் விடுதலை செய்யுமாறு கண்காணிப்புக்குழுவைத் தொடர்ச்சியாகக் கேட்டிருந்த போதிலும், இதுவரை ஆக்கபூர்வமான பதிலெதுவும் கிடைக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தவகையில் - இரண்டு தரப்பிலிருந்தும் போர்நிறுத்த மீறல்களில் ஈடுபடுவோர் - அந்தந்தத் தரப்பின் சட்ட திட்டங்களுக்கமைவாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பது, உண்மையில் போர் நிறுத்த உடன்பாட்டினை அர்த்தமிழக்கச் செய்வதோடு - சமாதான முயற்சிகளைக் சீர்குலைக்கும் அபாயமுள்ளதையும் விடுலைப் புலிகள் எச்சரிக்கையுணர்வுடன் கண்காணிப்புக்குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

முதலில் - போர்நிறுத்த மீறல்களில் ஈடுபடுவோரை நீதிமன்ற நடவடிக்கைகளுக்குள் கொண்டுவந்தது அரசாங்கமே என்பதை இங்கு சுட்டிக் காட்டுவதோடு, தற்போது விவகாரத்திற்குட்பட்ட இரு படையினரை மட்டும் தவிர்த்து - இதற்கு முன் தம்மிடம் சரணடைந்த படையினரைக் கூட விடுதலைப் புலிகள், தமது நீதிமன்ற நடவடிக்கைகளுக் குள் உட்படுத்தாது நேரடியாகக் கண்காணிப்புக்குழு வினரிடமே கையளித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் - போர்நிறுத்த மீறல்கள் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கையாளும் விவகாரத்தில் கண்காணிப்புக் குழுவினர் சம்பந்தப்படுவதே - பொருத்தமானது எனப் புலிகள் நடந்து வந்தனர்.

ஆனால் - அரசாங்கத்தரப்போ, தற்போது கோரப்பட்ட ஆறு போராளிகளது விடயத்தோடு, அதற்கு முன்னரும் கூட, போராளிகள் போர்நிறுத்த மீறல்களில் ஈடுபடுவதாகக் காணுமிடத்து - அதனைத் தமது சட்ட நிர்வாத்திற்குட்பட்டதாகவே கவனித்து வந்தனர்.

இதன்பின்னரே - விடுதலைப் புலிகளும் தமது சட்ட நிர்வாகத்திற்குள், போர் நிறுத்த மீறல்களில் ஈடுபட்ட படையினரைக் கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது.

ஆனால், இந்த நடைமுறை தற்போது ஏராளம் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளதோடு, தேவையற்ற முரண்பாடுகளையும் உருவாக்கி வருவதால் - இதற்கு மேல் - போர் நிறுத்த மீறல் விவகாரம், கண்காணிப்புக் குழுவின் நேரடிக் கையாளுகைக்குட்பட்டதாக இருப்பதே - இருதரப்புக்கும் நம்பிக்கை தருவதாக அமையும். இதன்னையே புலிகளும் கண்காணிப்புக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே - 'படைச்சமநிலை' பற்றிக் குறிப்பிட்ட கண்காணிப்புக்குழு, தனியே இராணுவத்துறைக்கு மாத்திரமல்ல - இரு தரப்பினரதும் அரசியல், நீதிநிர்வாக நடைமுறைகளுக்கும் படைச் சமநிலையைப் பயன்படுத்துவதே நியாயபூர்வமானதாகும்.

இந்தவகையில் - ஏற்கனவே நடைமுறையிலிருந்து வரும் விடுதலைப் புலிகளது நீதி நிர்வாகச் செயற்பாட்டை ஏற்றுக்கொண்டு, தனது நிலைப்பாட்டை அமைப்பதே, கண்காணிப்புக்குழுவிடம் எதிர்பார்க்கப்படும் நேர்மையாகும்.

எனவே, அரசாங்க நீதித்துறையை மட்டும் கௌரவிப்பதாகவும் - விடுதலைப் புலிகளது நீதித்துறையை அதன் சட்டவரம்பு பற்றி விமர்சிப்பதாகவும் நடந்துகொள்வதைத் தவிர்த்து - நடுநிலைமையோடு பிரச்சினைகளைக் கையாள கண்காணிப்புக்குழு முன்வரவேண்டும்.

போர் நிறுத்தத்தைக் காப்பதற்கான வழிமுறைகளில் - அரசாங்கத்தினதோ, விடுதலைப் புலிகளினதோ நிர்வாக முறைகளின் தலையீடின்றி - அவற்றினைச் சுயாதீனமாக, சுதந்திரமாகக் கையாள வழிவகுப்பதே - கண்காணிப்புக் குழுவின் நோக்கினை வலுவடையச் செய்யும். தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும் வழிசெய்யும்.

# சமபலம் பேணலுக்கான முக்கிய தேவை புரிந்துணர்வு ஒப்பந்த மீள் வரைபே !



கண்காணிப்புக்குழுத் தலைவர், றொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு அண்மையில் வழங்கிய பேட்டியில் "எமது அனுபவங்களின் அடிப்படையில், ஒப்பந்தத்திற்கு முன்னிருந்த இராணுவபலம் பேணப்படாதவிடத்து, அது குழப்பமான ஒரு நிலைக்குப் பிரச்சினையை இட்டுச்செல்லும். எனவே, சமபலம் பேணல் என்பது இன்றியமையாதது" எனத் தெரிவித்திருந்தார். அத்தோடு, "புலிகளைப் பொறுத்தவரை இது தவிர்க்க முடியாதபடி இன்றியமையாதது. ஏனெனில், சிறிலங்காவைப்போன்ற அரசயந்திரக் கட்டமைப்பையோ அல்லது சர்வதேச ஆதரவையோ அவர்கள் கொண்டிருக்கவில்லை" எனத் தெரிவித்திருக்கிறார். எனவே, புரிந்துணர்வு ஒப்பந்தக்காலம் தொடர்பான ஒரு சிறப்புப் பார்வையாக இந்தக் கட்டுரையை எடுத்துச் செல்வோம்.

**2002** ஆம் ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான ஏற்பாட்டின்படி (சரத்து மூன்று) உருவாக்கமடைந்த கண்காணிப்புக்குழுவின் பணிகள், போர்நிறுத்த காலத்திலான இருதரப்புப் பிரச்சினைகளிலும் தீர்வுகளிற்கான பரிந்துரைகளை வழங்குதல் என்ற சாரப்பட அமைவு பெற்றிருக்கிறது. எனினும், பல சம்பவங்களில் கண்காணிப்புக்குழுவின் அணுகுமுறைகள், வேறுபட்ட அணுகுமுறையானவையாகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதும், ஒப்பந்தத்தின் முன்னான பலத்தை-ஒப்பந்த காலத்திலும் தக்கவைத்தல் இன்றியமையாதது என்கிற அதன் விருப்பு, தமிழர் தரப்பு 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொண்டிருந்த இராணுவ மேலாண்மையைத் தக்கவைக்கவேண்டிய தேவையை வலியுறுத்துகிறது.

இந்தவகையில், சமபலம் பேணல் என்கிற அத்தியாயத்தினுள் நிழலரச செயற்பாடுகள், வரியிறுப்பு, படைச்சேர்ப்பு, கடற்கட்டுப்பாடு என்பன தமிழர் தரப்பின் தவிர்க்கமுடியாத தேவைகளாக அடக்கம் பெற்றுவிடுகின்றன. அத்தோடு, பேச்சுவார்த்தையின்போதான பேரம் பேசுதலிற்கான இன்றியமையாத செயற்பாடுகளாகவும் இவை தோற்றந்தருகின்றன. எனவே, தொடர்ந்து செல்கின்ற பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்று எட்டப்பட்டு, அது நடைமுறைச் சாத்தியம் பெற்றபின்பே இச்செயற்பாடுகளைப் பரிசீலனைக்குட்படுத்த முடியும். அதுகூட, அத்தீர்வின் பின்னரான காலத்தில் இச்செயற்பாடுகளிற்கான நிதித் தேவையை, பலத்தை வழங்குகிற மாற்று ஊடகம் என்பனதிடமாக அடையாளப்படுத்தப்பட்ட பின்பே இவை குறித்து விவாதிக்கமுடியும்.

எனவே - இதுவரை காலமும் தமிழர் தரப்பினருக்கு எதிரான முறைப்பாடுகளாகக் கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பெரும்பாலான சம்பவங்கள் - 'முறைப்பாடுகள்' என்கிற வரையறைக்குள் அடக்கம் பெறுமா? என்பதே தற்போதைய கேள்வியாகும். ஆனால், சிறிலங்காப் படைகளின் அத்துமீறல்கள் இதுவரை 16 இக்கும் மேற்பட்ட பொதுமக்களைக் காவுகொண்டதாகவும், அத்தோடு போராளிகளைக் கோபமுறச்செய்யும் வலிந்த செயற்பாடுகளைப் படைகள் கிரமமாக மேற்கொண்டு வந்தன. மானிப்பாய்ச் சம்பவத்தையடுத்து, ஒழுங்கமைக்கப்பட்ட பொலிஸ் பிரிவு வட-கிழக்கின் பணிகளைக் கையாளவேண்டும் எனவும், இராணுவம் தவிர்க்கப்படவேண்டும் என்ற பரிந்துரையைத் தவிர, வேறு பரிந்துரைகள் கண்காணிப்புக் குழுவால் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இதற்கு அடுத்தபடியாக இங்கு கரிசனைக்குட்படுவது- படைத்துறை ஆட்சேர்ப்பு மற்றும் ஆயுதப்பயிற்சி என்பன. குறிப்பாகச் சந்திரிகா தரப்பால் தமிழர் தரப்பிற்கெதிரான பெரிதுபடுத்தப்பட்ட பிரசாரமாக இது தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இவ்வாறான செயற்பாடுகளில் இரு தரப்பும் ஈடுபடுவது உத்தியோகபூர்வமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. அதுகூட, 200,000 இற்கு மேற்பட்ட படைகளைக் கொண்டுள்ள சிறிலங்கா முப்படைகளிற்குமான ஆட்சேர்ப்புக்களை நடைமுறைப்படுத்திவரும் இன்றையதேதியில், தமிழர்தரப்பும் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவது இன்றியமையாததாகும். இரு தரப்பினதும் ஆட்சேர்ப்பு, பயிற்சி என்பன நியாயமானது என்பதைத் தெளிவுபடுத்தவேண்டிய தேவை கண்காணிப்புக்குழுவைச் சார்ந்துள்ளது.

அவ்வாறானதே தமிழர் தரப்பின் படையணிகளின் உடை விவாகரமும். ஆயுதமற்ற, சாதாரண உடையணிந்த போராளிகள்- அரசியற்பணி மற்றும் உறவுகளைச் சந்திப்பதற்கான பயணங்களை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மேற்கொள்ளலாம் என்பதே ஒப்பந்தச் சரத்து. இந்தவகையில், மரபுப் படையணிகளான தமிழர் தரப்பின் படைப்பிரிவுகள் ஒவ்வொன்றும் தமக்கான பிரத்தியேகச் சீருடைகளையும், இலச்சினைகளையும் கொண்டிருக்கின்றன.

பெண்கள் அணியினரும் அவ்வாறே. தாம் சார்ந்த படைப் பிரிவின் சீருடைகள், இலச்சினைகள் என்பனவே படைத்துறை உடையாகும். இருந்தும், சாதாரண உடுப்பிற்கு மேலான இடுப்புப்பட்டிகூட விவகாரமாக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கண்காணிப்புக் குழுவின் முடிவும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியதொன்றே.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான விவகாரம்கூட அவ்வாறானதே. தமது முகாங்களின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் என்கிற கோதாவில், விரிவுபடுத்தப்பட்டுள்ள பகுதிகளில் அடங்கியுள்ள வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள், பொதுக்கட்டடங்கள் என்பனவற்றினைப் பயன்படுத்த ஏதுவாக்குதல் என்கிற இச்செயற்பாடு - சமநிலை பேணல் என்கிற காரணத்திற்காக மறுக்கப்பட்டு வருகிறது. மேற்படி மாவட்டங்களில் சுமார் 30 விழுக்காடு பகுதி இவ்வாறு முடக்கப்பட்டுள்ளது. "சகஜவாழ்வு நிலையை வட-கிழக்கில் ஏற்படுத்தல்" என்கிற புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 2 ஆவது சரத்தையே மரணிக்கச் செய்துவிடும் அபாயத்தை உணர்த்தி நிற்கிறது.

இதற்கடுத்தபடியாக இடம்பெற்றுள்ளது கடற்கையாளுகை தொடர்பான சம்பவமாகும். கடந்த ஆண்டு மே மாதம் இடம்பெற்ற வாகரைச் சம்பவம், மற்றும் இம்மாத முற்பகுதியில் இரணைதீவுக் கடலில் இடம்பெற்ற சம்பவங்கள் கடற் கையாளுகை சம்பந்தமான இணைபபைப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்படுத்த வேண்டிய தேவையைச் சுட்டிநிற்கின்றன. அத்தோடு சமபலம் பேணல என்கிற செயற்பாட்டிலும் பாரிய இடைவெளியை எதிர்காலத்தில் ஏற்படுத்திவிடும் ஒரு ஆபத்தான விடயமாக இது அமைவுபெற்றுள்ளது. ஏனெனில், இலங்கையின் இறைமை மற்றும் பிரதேசக் கட்டுப்பாட்டை கையாளுகிற பொறுப்பு கடற்படையிடம் இருந்தாலும், இலங்கைத் தீவின் கடல் எல்லைக்குள் உட்பட்ட கரையோரக் கட்டுப்பாடு கடற்புலிகள் வசமே பெரும்பாலும் இருந்து வருகிறது.

**சுதர்மா**

தமிழர் பிரதேசத்தில் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் கடற்தொடர்புடயவை. இலங்கைத் தீவின் கரையோரப் பிரதேசங்களில் 60 விழுக்காட்டிற்கும் மேலான பிரதேசம் இம்மாவட்டங்களிலேயே அடங்குகிறது. *(நாளை தொடரும்)*

# ஜனாதிபதி நிதியம் நிதி வழங்கவில்லை; மகாபொல இடைநிறுத்தப்படும் ஆபத்து!

ஜனாதிபதி நிதியத்திலிருந்து மகாபொல நிதி கிடைக்காததால் எதிர்வரும் ஜுன் மாதத்துக்குப் பின்னர் மாணவர்களுக்கான மகாபொல நிதியுதவியை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக மகாபொல நிதியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - 1981 இல் மகாபொல நிதியம் உருவாக்கப்பட்டபோது, மகாபொல அபிவிருத்தி லொத்தரில் இருந்து கிடைக்கும் இலாபத்தில் 50 சதவீதம் அதற்கு ஒதுக்குவதாகவும், மிகுதி ஜனாதிபதி நிதியத்துக்கு வழங்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், 1997 இல் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், மகாபொல லொத்தர் மூலம் கிடைக்கும் இலாபம் முழுவதையும் ஜனாதிபதி நிதியத்துக்கே சேர வேண்டும் எனறும், ஜனாதிபதி நிதியத்திலிருந்தே மகாபொல நிதியத்துக்கு நிதி விடுவிக்கப்படும் என அறிவித்தது. இதற்கான சட்ட ஏற்பாடுகளும் கொண்டு வரப்பட்டன.

இதன்படி மகாபொல லொத்தர் மூலம் கிடைத்த இலாபத் தொகையில் 30 சதவீதமே மகாபொல நிதியத்துக்கு வழங்கப்பட்டது.

இந்தவகையில் மகாபொல நிதியத்துக்கு 580 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி நிதியம் - மகாபொல நிதியத்துக்கு வழங்க வேண்டியிருக்கிறது. இந்த 580 மில்லியன் ரூபாவை - ஜனாதிபதி நிதியம் உடனடியாக வழங்காவிட்டால் ஜுன் மாதத்துக்குப் பின்னர், பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுகளை வழங்க முடியாதநிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகச் சட்டமா அதிபருக்குத் தாம் தெரியப்படுத்தியிருப்பதாகவும் மகாபொல நிதிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் 50 அறைகளுடன் நட்சத்திர ஹோட்டல் அமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணத்தில் 50 அறைகளைக் கொண்ட நட்சத்திர ஹோட்டல் ஒன்றைக் கட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

350 மில்லியன் ரூபா செலவில் இந்த ஹோட்டலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எலிபன்ற் கொறிடோர் ஹோட்டேல் இதற்கான முயற்சிகளை எடுத்து வருவதாக அதன் தலைவர் பிரசன்ன ஜெயவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கமும், புலிகளும் சமாதான முயற்சிகளில் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினால் - இந்த நட்சத்திர ஹோடடலை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

காரைநகர் அல்லது அதனை அண்டிய தீவுப்பகுதிகளில் இந்த ஹோட்டலை அமைக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது. இதன் மூலம் உல்லாசப் பயணிகளைக் கவர வாய்ப்பாக அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# உலக வரைபடத்தில் இருந்து மறைந்துவிட்ட யூகோசிலாவியா!

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்ட நாயனார் பற்றிய புராணம் எல்லோருக்கும் தெரியும். இந்த நாயன்மார்களது வரலாற்றைச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் (பெரிய புராணம்) பாடி வைத்திருக்கிறார்.

திருநீலகண்டர் ஒரு நாள் பரத்தை ஒருத்தியின் வீட்டுக்குப் போய்வந்தார். அதனைக் கொள்ளாத அவரது மனைவியார் "இனி எம்மைத் தீண்டுதல் கூடாது. தீண்டினால் திருநீலகண்டம்" எனக் கூறினார். "எம்மை" என்பது எல்லாப் பெண்களையும் குறிப்பதால் "நாம் இனிப் பெண்களையும் தீண்டுவதில்லை" என உறுதிசெய்து கொண்டார் திருநீலகண்டர்.

ஒருநாள் ஒரு சிவயோகியார் திருநீலகண்டர் வீட்டுக்கு வந்தார். தன்னிடம் இருந்த ஒரு திருவோட்டைக் கொடுத்து "இது மிக்க சிறப்பும், அருமையும், சக்தியும் வாய்ந்த ஓடு. இது உங்களிடம் இருக்கட்டும். திரும்பி வந்து பெற்றுக் கொள்கிறேன்." எனக்கூறிவிட்டுச் சென்றார். திருநீலகண்டர் ஓட்டை மறைவான இடத்தில் பத்திரமாகப் புதைத்து வைத்தார். ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் சிவயோகியார் திரும்பி வந்து அந்தத் திருவோட்டைத் தருமாறு கேட்டார்.

உள்ளே போன திருநீலகண்டர், தான் வைத்த இடத்தில் திருவோடு இல்லாதது கண்டு, அது மாயமாய் மறைந்துவிட்டது. திருநீலகண்டர் தவித்த தவிப்பைச் சேக்கிழார் ஒரு பாடல் மூலம் படம் பிடித்துக் காட்டுகிறார்.

என்று அவர்விரைந்து கூற
இருந்தவர் ஈந்த ஓடு
சென் றுமுன் கொண்ர்வான்
புக்கார்
கண்டிலர் திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார்
தேடியும் காணார் மாயை
ஒன்றும் அங்கு அறிந்திலார்
தாம்
உரைப்பது ஒன்று இன்றி
நின்றார்!

(பெரியபுராணம் 380)

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இருக்கும் என்று நினைக்கிறேன். திருநீலகண்ட நாயனார் கதை திரைப்படமாக வந்தது. அதில் ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராச பாகவதர் திருநீலகண்ட நாயனாராக நடித்தார். திருவோட்டைக் காணாது தவித்தபோது "மறைவாய்ப் புதைத்த ஓடு மறைந்த மாயம் நானறியேன்" என்று ஒரு பாட்டுப் பாடுவார்.

அது சரி.திருநீலகண்டரின் திருவோட்டுக்கும், யூகோசிலாவியாவிற்கும் என்ன தொடர்பு?

அன்று மறைவாய்ப் புதைத்த ஓடு மறைந்த மாயம்போலவே, இன்று யூகோசிலாவியா ஓசைப்படாமல் உலக வரைபடத்தில் இருந்து மறைந்து விட்டது.

யூகோசிலாவியா என்ற குடியரசு கடந்த பெப்ரவரி 4 ஆம் நாள் உலக வரைபடத்தில் இருந்து திருநீலகண்டர் புதைத்த திருவோட்டைப்போல் மறைந்துவிட்டது!

யூகோசிலாவியாவிற்கும் பதில் இப்போது சேர்பியா-மொன்ரெநீக்றோ **(Serbia-Montenegro)** புதிய இணைப்பாட்சி நாடு உருவாகியுள்ளது.

ஆனால், இந்தப்புதிய நாட்டிற்கு ஒப்புதல் வழங்க அமெரிக்கா மறுத்துவிட்டது. யூகோசிலாவியாக் குடியரசின் வாரிசாக எந்த நாட்டையும் அமெரிக்கா ஏற்கத் தயாராய் இல்லை.

ய,கோசிலாவியா சோசலிசக் குடியரசைப் பொறுத்தளவில், அது தன்னைத்தானே கரைத்துக் கொண்டு விட்டது **(dissolve)** என்றும் அதில் இருந்து பிரிந்த எந்தக் குடியரசும், அரசு அல்லது நாட்டின் தொடர்ச்சி என்று கருத முடியாது என்கிறது அமெரிக்கா. அமெரிக்கா இன்று உலகத்தின் சட்டாம்பிளளை. அது வைத்ததே சட்டம். சொல்வதே வேதம். அதன் முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்ய வழியே இல்லை.

மொன்ரெநீக்கிறோ சிறிய நாடு. ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த யூகோசிலாவியா, குடியரசில் இருந்த தன்னாட்சி படைத்த 6 குடியரசுகளில் ஒன்று.

1992 இல் யூகோசிலாவியா குலைந்தபோது, மொன்ரெநீக்றோ-சேர்பியாவோடு புதிய இணைப்பு ஒன்றில் இணைந்து கொண்டது. அப்படி இணைக்கப்பட்ட நாட்டின் பெயர் யூகோசிலாவியா குடியரசு என்பதாகும்.

மொன்ரெநீக்கிறோ நாட்டின் பரப்பளவு 13,938 ச.கி மீற்றர். தலைநகர் பொட்கொறிகா **(Podgorica)**. மக்கள் தொகை 680,158.

மொன்ரெநீக்கிறோ குடியரசின் மக்கள் தொகையில்- மொன்ரெநீக்றோவினர் 62 விழுக்காடு, சேர்பியர் 9 விழுக்காடு, அல்பேனியர் 7 விழுக்காடு, முஸ்லிம் 15 விழுக்காடு, குரோசியர் 1 விழுக்காடு ஏனையோர் 6 விழுக்காடு.

சேர்பியாவின் நிலப்பரப்பு 88,412 ச.கி.மீ. தலைநகர் பெல்கிறேட் . சேர்பியாவின் மக்கள் தொகை 9,981,929.

சேர்பியா மற்றும் மொன்ரெநீக்றோ இரண்டின் மொத்த நிலப்பரப்பு 102,350 ச.கி.மீ. மொத்த மக்கள் தொகை 10,662,087.

இரண்டு குடியரசுகளின் மொத்த மக்கள் தொகையில் சேர்பியர் 63 விழுக்காடு.அல்பேனியர் 14 விழுக்காடு. மொன்ரெநீக்கிறோன்ஸ் 6 விழுக்காடு. ஹங்கேரியன்ஸ் 4 விழுக்காடு. எஞ்சியோர் 13 விழுக்காடு.

இந்த நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர், இடப்பெயர்வு, இனச் சுத்திகரிப்புக் காரணமாக மேலே கொடுக்கப்பட்டுள்ள மக்கள் தொகை திருத்தமானது அல்லது செம்மையானது என்று எடுத்துக் கொள்ள முடியாது.

இரண்டு இணைப்பரசுகளுக்கும் இடையில் எழுதப்பட்ட உடன்படிக்கை, இரண்டு குடியரசுகளுக்கும் **(serbia-Montenegro)** பூரண இறைமையை வழங்குகிறது. இரண்டுக்கும் இடையில் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத் துறைகளில் மட்டும் மைய (இணைப்பாட்சி) அரசின் கைகளில் அதிகாரம் இருக்கும்.

பெல்கிரேட் தொடர்ந்த இந்த இணைப்பாட்சியின் தலைநகரமாக விளங்கும்.

ஆனால், மத்திய காப்பகம் மற்றும் நாணயம் தனித்தனியாக இருக்கும். சேர்பியா பழைய டினார் நாணயத்தைத் தொடர்ந்து பயன்படுத்தும். மொன்ரெநீக்றோ- யூறோ நாணயத்தைப் பயன்படுத்தும்.

"இந்த ஏற்பாடு சேர்பியா-மொன்ரெநீக்றோ இரண்டின் நலன்களுக்கும் நலலது. மேற்கொண்டு இணைப்பாட்சி தொடரலாம். அல்லது இரண்டு நாடுகளும் முற்றாகப் பிரிந்து அதனதன் வழியில் செல்லலாம்" எனச் சேர்பியாவின் துணைப்பிரதமர் **Miodrag Isakov** தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கையின்படி இன்னும் 3 ஆண்டுகள் கழித்து தனி நாட்டுக்கான நேரடி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இப்படியொரு ஏற்பாட்டுக்குக் காரணம் மொன்ரெநீக்றோவில் தனி நாட்டுக்கான கோரிக்கை பலமாக இருப்பதுதான். 1998 இல் மொன்ரெநீக்றோ இணைப்பாட்சியின் தலைவர்கள் மைய அரசின் அமைப்புக்களைப் புறக்கணித்துப் போராட்டம் நடத்தினார்கள். அதன் எதிரொலியாகச் சேர்பியாவிலும் பிரிவினைக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த உடன்படிக்கையைச் சேர்பியத் தேசியவாதிகள் பலமாகக் கண்டித்துள்ளார்கள். சேர்பியாவுக்கும், மொன்ரெநீக்றோவிற்கும் இடையில் வரலாற்று அடிப்படையிலான உறவு நீடிக்கவேண்டும் என்பது அவர்களது வாதம்.

**Vojislav Seselj** என்ற நாடாளுமன்ற உறுப்பினர் பேசும்போது "இப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றால் சீர்திருத்தம் என்ற பெயரில் ஒரு முழுமையான கலைப்பிற்கும், 75ஆண்டு காலமாகத் தொடர்ந்து இருந்துவந்த யூகோசிலாவியா என்ற பெயரை வரலாற்றுக்கு அனுப்பி வைக்கிறீர்கள்" எனக் காட்டமாகப் பேசினார்.

மிலோசிவிக்கின் சோசலிசக் கட்சி உறுப்பினர் அலெக்சாண்டர் சிமிக் **(Aleksander Simic)** பேசும்போது "எனது எண்ணப்படி யூகோசிலாவியா மிக நல்ல நாடு. அதை அழிப்பதற்கு ஏன பலர் துடிக்கிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை" என்றார்.

ஆனால், யூகோசிலாவியாவின் முன்னாள் பிரதமர் **Dragisa Pesic** பேசும்போது, இப்போது கொண்டு வரப்பட்ட சீர்திருத்தம் நலம் பயக்கிற ஒரு நடவடிக்கை என்றார். "புதிய அரசு ஒரு நவீனச் செல்வச்செழிப்பான நாடாகத் திகழ நல்ல வாய்ப்பிருக்கிறது" என நம்பிக்கை தெரிவித்தார்.

இன்னும் 3 ஆண்டுகளில் 680,158 மக்கள் தொகை கொண்ட மொன்ரெநீக்றோ நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தால், அது ஏனைய சிறுபான்மை இனங்கள் மத்தியில் பிரிவினை இயக்கங்கள் தோன்றுவதறகு அச்சாரம் வைத்துவிடும் என்று ஐரோப்பிய ஒன்றியம் பயப்படுகிறது. கொசோவியர் மத்தியில் அப்படியான பிரிவினை இயக்கம் உருவாகும் வாய்ப்புக்கள் இருக்கிறது.

விரைவில் 126 உறுப்பினர்கள் கொண்ட ஒருபுதிய நாடாளுமன்றததுக்குத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இடைக்காலத்தில் இப்போதுள்ள அரச இயந்திரம் தொடர்ந்து இயங்கும். ஆனால், மிலோசிவிக்கைப் பதவியில் இருந்து துரத்திய, இன்னாள் ஜனாதிபதி **Kostunica** தேர்தல் நடைபெறும் வரை எந்தப் பதவியும் இல்லாமல் இருக்கப் போகிறார். புதிய நாடாளுமன்றந்தான் புதிய ஜனாதிபதியைத் தெரிவு



மிலோசிவிக்

செய்ய இருக்கிறது. சேர்பிய மக்களது வரலாறு ஒரு சோக வரலாறு. சேர்பியா (யூகோசிலாவியா) பல்லின மக்கள் வாழும் நாடு. இனங்களுக்கு இடையே வரலாற்று முறையான பகைமை இருந்துவந்தது. அவ்வப்போது அது சுதந்திரநாடாக விளங்கிவந்தது. ஆனால் கி.பி.1389 இல் துருக்கி சேர்பியா மீது படையெடுத்து அதன் நிலப்பரப்பின் பெரும் பகுதியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

1459 ஆம் ஆண்டு சேர்பியாவை துருக்கி முற்றாகப் பிடித்தது. அதன் பின் ஐந்து நூற்றாண்டு

**நக்கீரன்**

காலத்துக்கு ஒட்டமான் பேரரசின் இரும்புப் பெட்டிக்குள் அது வைக்கப்பட்டிருந்தது.

ஒட்டமான் பேரரசு இஸ்லாமிய அரசாக இருந்ததால் கிறிஸ்தவர்களான சேர்பியர்கள் அடிமைகள்போல் மிகவும் கேவலமாக நடத்தப்பட்டார்கள். அவமானப்படுத்தப்பட்டார்கள்.

(தொடரும்)

# திட்டமிடல் சேவை ஆட்சேர்ப்பு; மோசடி என வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திட்டமிடல் சேவைக்கான ஆட்சேர்ப்பின்போது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாகக்கூறி, இலங்கைத் திட்டமிடல் சேவைச்சபைக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தமிழ்மொழி மூலமாகத் தோற்றி, சித்தியடைந்த மூவருக்கு இந்நியமனம் மறுக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் தேசியரீதியாக 5 ஆம், 25 ஆம், 30 ஆம் இடங்களைப் பெற்றுக் கொண்டவர்கள். எனினும், இவர்களது பட்டப் பின் படிப்பு டிப்ளோமாச் சான்றிதழ் தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்பட்டது என்ற காரணத்துக்காக இவர்களுக்கு மேற்படி நியமனம் மறுக்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்தே மேற்படி மூவரும் திட்டமிடல் சேவைச் சபைக்கு எதிராகத் தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாகக்கூறி வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கின் தீர்ப்பு இம்மாதம் இரண்டாம் வாரம் அளவில் வழங்கப்படும் என்று எதிர்பாாக்கப்படுகிறது.

### வதிவிடப் பயிற்சி

சமூக நலன்புரி அமைச்சு குழு உத்தியோகத்தர்களுக்கான வதிவிடப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

சமுதாய மட்டத்தில் ஊனமுற்றவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்காக- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டப் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சமூகசேவை உத்தியோகத்தர்களுக்கும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குமே சமூக நலன்புரி அமைச்சினால வதிவிடப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இவர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் 8 ஆம் திகதி தொடங்கி 15 ஆம் திகதிவரை- வவுனியா, குருமன்காடு, 1ஆவது ஒழுங்கையிலுள்ள இல.17 இல் அமைந்துள்ள ஆர்.டி.எவ் பயிற்சி நிலையத்தில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

**பளை- கோட்டப் பாடசாலைகள்**

# மெய்வல்லுநர் போட்டிகளை நடத்த முடியாத நிலையில்

(பளை)

பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் விளையாட்டு மைதானங்களைப் பயன்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகளை நடத்த முடியாத் நிலை ஏற்பட்டிருக்கிறது.

பளைக் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களில் மிதிவெடி அபாயம் உள்ளது. இதனால் மாணவர்கள் மெய்வல்லுநர் போட்டிகளுக்காகப் பயிற்சிகளில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர்.

# மகளிர் தின நிகழ்வுகளுக்கு தென்பகுதியிலிருந்து பெண்கள்!

(கொழும்பு)

மார்ச் 8 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தையொட்டி - யாழ். இந்து மகளிர் கல்லூரியில் விவாத மேடை நிகழ்வுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காகத் தென்னிலங்கை மகளிர் அமைப்பொன்றைச் சேர்ந்த 200 பெண்கள் யாழ்.வரவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் சமூக மேம்பாட்டுத்திட்ட நிறுவனத்துடன் இணைந்து மகளிர் அபிவிருத்தி அமைப்பு ஏற்பாடு செய்திருப்பதாக அதன் இயக்குநர் சறோஜா சிவச்சந்திரன் தெரிவித்தார்.

(09)

# "லக்ஹண்ட" ஊடகவியலாளர் வேலையிலிருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

"லக்ஹண்ட" வானொலியின் சிரேஷ்ட செய்தியாளரான சரித்த திஸ்ஸநாயக்க வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். பாதுகாப்பு நிலவரம் தொடர்பான செய்தியொன்றை- ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு மொழி மாற்றிய போது திரிபுபடுத்தினார் என்று இவர் மீது குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருக்கிறது.

சரித்த திஸ்ஸநாயக்க முன்னர் பொ.ஜ.மு.ஆட்சியின் ஊடகப்பிரசாரத்திற்கு முக்கியமான நபராக இருந்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக அமைச்சர் மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

ICC Cricket World Cup
SOUTH AFRICA 2003



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## எங்கே பார்ப்போம் விறுவிறுப்பை...!

இன்றும் நடக்கப்போகிறது மிகப் பெரியபோர். இரு எதிர் எதிர்த் துருவங்களுக்கிடையே **Super Six** க்கான போர் நடக்கப் போகிறது, **Kingsmead, DURBAN** மைதானத்தில் **G.M.T** நேரப்படி 12.30க்கு இலங்கை அணியும் தென்னாபிரிக்க அணியும் சந்திக்கப் போகின்றன.

யார் விடை கொடுக்கப் போகின்றார்கள்? இலங்கை அணி நாடு திரும்புமா? அல்லது தென்னாபிரிக்க அணி சொந்த மண்



கிப்ஸ் - எல்லோரும் இப்படி அடிக்கவேண்டும்

ணிலே மண்கவ்வியது என்று சொந்த இனத்தினாலேயே கல்லெறிகளைச் சந்திக்கப் போகின்றதா...?

தென்னாபிரிக்காவின் கடந்த கால வரலாறுகளைப் புரட்டிப்பார்க்கும்போது, தென்னாபிரிக்கா - இலங்கை அணியை புரட்டிப் புரட்டி எடுத்தது தான் வரலாறு. இலங்கை சந்தித்த போட்டிகளில் 90% இற்கு மேல் தென்னாபிரிக்காவே அபார வெற்றிகளைக் குவித்திருக்கிறது.

மைதானக் கட்டமைப்பும் அதன் தன்மைகளும், தென்னாபிரிக்காவுக்கு நன்கு பழக்கப்பட்ட ஒன்று. எனவே, தென்னாபிரிக்காவுக்கு இது **Plus Point** ஆகவே இருக்கும். அத்துடன், கரி கேர்ஸ்ரன் தொடக்கம் குளூஸ்னர் வரை நின்று நிதானமாகவும் தேவையேற்படின் விளாசித்தள்ளவும் பெயர்போன அணி தென்னாபிரிக்க அணி. மொத்தமாக **All Rounder's Park** தென்னாபிரிக்காவில்தான் உண்டு என்று கூறுவதற்கு மறுப்பில்லை.

1999 உலகக் கிண்ணப் போட்டியில் **Tie** முறை மூலம் இறுதிப் போட்டியைச் சந்திக்கத் தவறி வெந்து போன தென்னாபிரிக்க அணிக்கு இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று கூறினாலும் - முதல் போட்டியிலேயே மேற்கிந்தியத்தீவுகள் அணியிடம் வாங்கிக்கட்டிய தென்னாபிரிக்க அணி, அந்த அதிர்ச்சியிலிருந்தும் இன்னும் பூரணமாக விடுபட்டதாக இல்லை.

தென்னாபிரிக்க அணியும், அதன அணித்தலைவர் ஷோண் பொல்லொக்



சனத் - என்னாலும் ஏலும்

மூர்க்கத்தனமாக விளையாட வேண்டுமோ அதன்படியே நடக்கக் கூடியது. இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்தால் இரண்டாவது இன்னிங்ஸில் எதிரணியை திணறவைத்து அனேகமாக வெற்றி வாகை சூடுகின்ற அணியாகும் தென்னாபிரிக்க மக்களாலும், விமர்சகர்களாலும் கடும் தொனியில் விமர்சிக்கப்படுகின்றதை நிறுத்த வேண்டுமாயின், தென்னாபிரிக்கா விளையாட்டில் மூர்க்கத்தனம் காட்டி **Super Six** ஐத் தாண்டி இறுதிப் போட்டியைச் சந்தித்து வென்றேயாக வேண்டும்.

இலங்கை அணியைப் பொறுத்த வரை, தென்னாபிரிக்காவில் தென்னாபிரிக்க அணியைச் சந்திப்பது என்பது வயிற்றில் புளியைக் கரைக்கின்ற விடயமாகும்.

ஆனாலும், எச்சந்தர்ப்பத்தில்கும். எதுவும் **Toss Winning** இல்தான் உண்டு.

ஆனாலும், இன்றைய ஆட்டம் தென்னாபிரிக்காவுக்குத்தான் அதிக சாதகமாக இருக்கும். கிப்ஸ், கலிஸ், பொல்லொக், என்ரினி போன்றோர் பிரகாசிக்க வாய்ப்புள்ளது. இலங்கை அணி அதிர்ச்சியுடன் செல்ல உகந்த களம் தென்னாபிரிக்காவில் உண்டு.

எது நடக்குமோ... யாம் ஒன்றும் அறியோம் பராபரமே...!

நடுவர்களாக இருக்கப் போகும் வெங்கட்ராமனும், பக்னரும் சரியான தீர்ப்பை வழங்குவார்களா...?

## நேற்றைய ஆட்டத்திலிருந்து சில காட்சிகள்...









## நாளும் ஒரு வினா

இந்திய - பாகிஸ்தான் (2003 W.C) ஆட்டத்தின்போது சச்சின் ஏற்படுத்திய புதிய சாதனை எது?

12,000 ஓட்டங்களுக்கு மேல் ODI இல் பெற்றது.

## எங்கும் எதிலும் எல்லாம் நிறைவு!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் தென்னாசியாவின் **BIG MATCH** என்றால் எப்போதுமே அது இந்திய, பாகிஸ்தான் சந்திப்புத்தான். நிறையவே கிரிக்கெட்டும், நிறையவே அரசியலும் கலந்துகொண்டாடப்படும் தீக்குளிப்புத் திருவிழாவது.



சச்சினை வீழ்த்திய களிப்பில் அக்தார்

வென்றே ஆகவேண்டும் என்ற வேகத்துடனும் இந்திய, பாகிஸ்தானிய ரசிகர்கள் மத்தியில் அது ஒருவெறி. வீரத்துடனும் ஆடப்படும் ஆட்டம். சனிக்கிழமை நடந்ததும் அதுதான். பூஜைகள், "துஆ கேட்டல்" என்று ரசிகர்கள் மத் தியில் ஒரே சமயச்சடங்குகள் மறுபுறம் விவாதங்கள், விமர்சனங்கள்.

பாகிஸ்தான் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்து ஆடத்தொடங்கியதும் அன்வர் லாவகமாக ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினார். இந்திய ஆட்டம் என்றதுமே நீண்டகாலத்துக்குப் பின் அன்வர் பந்தின் மீதுள்ள வெறுப்பை நன்றாகவே வெளிப்படுத்தினார். அவரது அபாரமான ஆட்டம், பாகிஸ்தானை பலமான நிலைக்குக் கொண்டுசென்றது. இன்சமாமை விட்டால் ஏனையவர்கள் ரன் வேகத்தைச் சோடை போகவிடாமல் வளர்த்துக்கொண்டே போனதை அவதானிக்கலாம். இறுதியில் பாகிஸ்தான் ஏழு விக்கெட்டுகளை இழந்து 273 ஓட்டங்கள் பெற்ற நிலையில் 50 ஓவர்களும் முடிவடைந்தன. இந்த ஓட்ட எண்ணிக்கை இந்தியாவுக்குச் சவாலானதொரு எண்ணிக்கையே. ஏனெனில், மெல்ல மெல்ல அதிர்ச்சிகளில் இருந்து மீண்டுவரும் அணி இந்திய அணி. தாய் நாட்டின் அசிங்கக் கும்பல்களை ரசிகர்களாகக் கொண்ட அணி இந்திய அணி- மேலும் வாசிம், வக்கார், அக்தார் என்னும் மும்முனைத் தாக்குதலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையும்கூட.



சச்சினுக்கு மைதானத்தில் சிகிச்சை

இந்நிலையில், பெரும்பான்மையாக ரசிகர்கள் பச்சைக்கொடி பறக்கும் என்றே எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், இவையெல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு சச்சின் டெண்டுல்கர் தான் யார் என்பதை நிரூபித்தார். உண்மையில் இந்தியா இறுதிப் பந்தில் ஆட்டத்தை வெல்லவில்லை. சச்சின் எதிர்நோக்கிய முதல் பந்திலேயே இந்தியாவின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு விட்டது என்பதே உண்மை. இவரது துவம்ச அணுகுமுறை, பின் வந்த ஆட்டக்காரர்களுக்குத் துணிவைக் கொடுத்ததுடன், எதிரணிப் பிரபல பந்து வீச்சாளர்களுக்குக் கிலேசத்தையும் கொடுத்துவிட்டது. துரதிர்ஷ்டவசமாக மைதானத்திலேயே உபாதைகளால் துன்பப்பட்ட சச்சின், தனது சதத்தை எட்ட இரண்டு ஓட்டங்கள் பெறமுடியாத நிலையில் ஆட்டமிழந்தார். இருந்தும், சதம் பெற்ற அன்வரையும் மீறி இவர் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டது இவரே **GREATEST** என்பதற்குக் கிடைத்த அங்கீகாரம். இன்னொரு வகையில், சச்சினுக்குப் பாடம் புகட்டச் சந்தர்ப்பம் எதிர்பார்த்திருந்த அக்தாருக்கு - ஒரு மாதிரியாக அவரது விக்கெட்டைச் சாய்த்தாலும், அவரது துடுப்பாட்டம் சச்சினால் வழங்கப்பட்ட "பயிற்சிப் பாசறை".



அன்வரின் அபார சதம்

டிராவிட், கைஃப் இருவரின் பங்களிப்பைப் பற்றிக் குறிப்பிட்டு அப்பால் யுவ்ராஜ்சிங் பற்றியும் குறிப்பிட வேண்டும். **CONCENTRATION + APPPLICATION** சேர்ந்த கலவை இவர். மூவேந்தர்களை சச்சின் எதிர் கொண்ட மாதிரி- யுவ்ராஜ் எதிர்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. ஆனால், யுவ்ராஜ்சிங் அதனைச் செய்து காட்டினார். மொத்தத்தில் இரு அணிகளும் ரசிகர்களுக்குத் தந்தது ஒரு உயர்தர கிரிக்கெட் ஆட்டம். இரண்டு அணிகளிலும் நட்சத்திரங்கள் அதிகம். ரசிகர்கள் என்ன எதிர்பார்த்தர்களோ- உபகண்ட வீரர்கள் அதனைத் தந்தார்கள். எதுவித முறையும் இல்லாமல் கிரிக்கெட் ஆட்டத்தின் சகல மகிழ்ச்சிகளையும் ரசிகர்கள் பெற்றுக் கொண்டார்கள். வழமைக்கு மாறாக இரு அணிகளுக்கிடையேயும் பரஸ்பர புரிந்துணர்வு இழையோடிக் கொண்டிருந்ததும் அவதானிக்கப்பட்டது. பாகிஸ்தான் சுற்றுப் போட்டிகளிலிருந்து வெளியேறலாம். இந்தியா அடுத்தகட்டத்துக்குப் போகலாம். இதெல்லாம் சுற்றுப்போட்டியின் நடைமுறை. ஆனால், உயர்ந்த தரத்திலாலான மற்றும் 2003 ஆம் ஆண்டுச் சுற்றுப்போட்டியின் முதல்தர ஆட்டம் ஒன்றைத் தந்த இந்த இரு அணிகளும், ரசிகர்கள் மனதில் என்றும் நிறைந்திருப்பார்கள்.

ஜோசப் கிருஷ்ணா

## இந்த வெற்றியிலும் ஒரு இரகசியம்!

**மேற்கிந்திய** அணி - கனடாவை வென்றது. ஓவருக்கு 10.4 என்ற



லாறா

ஓட்ட விகிதத்தில் பலம் குறைந்த நாட்டுக்கு எதிராக என்றாலும் இது சாத்தியமானது எப்படி. இந்த ரகசியத்தை அவர்களே கூறுகிறார்கள். முதல்நாள் பயிற்சியில் ஈடுபட்டபோது மிகச் சாதாரண பந்து வீச்சாளர்களைக் கொண்டு பந்து வீசச்செய்து பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஒரு உதைப்பந்தாட்ட போட்டிக்கு வந்திருந்த வீரர்கள் பந்து வீச்சாளரானார்கள். அவர்கள் தங்களுக்குத் தெரிந்த அளவில் பந்துவீச, மேற்கிந்திய வீரர்கள் சாத்து சாத்தென்று சாத்திப் பயிற்சி பெற்றிருக்கிறாார்கள். இந்த வகையில் பிறைன் லாறா 50 ஓட்டங்கள் எடுக்க எதிர்கொண்ட பந்துகள் 23 மட்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, மழையின் பழிவாங்கலும் சேர்ந்து மேற்கிந்திய அணியை அடுத்தடுத்த கட்டங்களுக்குச் செலுத்தும் சாத்தியங்கள் மிகக் குறைவு என்ற நிலையை உருவாக்கியிருக்கிறது.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலிய அணி

**இங்கிலாந்து அணி**

| | | |
|---|---|---|
| டிரொஸ்கொதிக் | Cமோட்டின் b மக்ரா | 37 |
| நைட் | C மாட்டின் b பைக்கல் | 30 |
| வகன் | C கில்கிறிஸ்ட் b பைக்கல் | 02 |
| ஹு சைன் | b பைக்கல் | 01 |
| ஸ்ருவட் | b பைக்கல் | 46 |
| கொலிங்வூட் | C கில்கிறிஸ்ட் b பைக்கல் | 10 |
| பிளண்டோவ் | C கில்கிறிஸ்ட் b பைக்கல் | 45 |
| வைட் | not out | 16 |
| கைல்ஸ் | C பெவன் b பைக்கல் | 02 |
| கெடிக் | not out | |
| 05உதிரிகள் | | 10 |
| மொத்தம் 8 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 204 |

**அவுஸ்திரேலிய அணி**

| | | |
|---|---|---|
| கில்கிறிஸட் | C வகன் b கெடிக் | 22 |
| ஹேடன் | C கைல்ஸ் b கெடிக் | 01 |
| பொண்டிங் | C கைல்ஸ் b கெடிக் | 18 |
| மாட்டின் | lbw b கெடிக் | 00 |
| லீமன் | C ஸ்ருவட் b வைட் | 37 |
| பெவன் | not out | 74 |
| சிமண்ட்ஸ் | C and b கைல்ஸ் | 00 |
| ஹொக் | C ஸ்ருவட் b கைல்ஸ் | 01 |
| பிரெட் லீ | not out | 06 |
| பைக்கல் | not out | 34 |
| உதிரிகள் | | 15 |
| 8 விக்கெட்டுக்களை இழந்து (49.4 ஓவர்கள்) | | 208 |

**பந்து வீச்சு - அவுஸ்திரேலிய அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மக்ரா | 09 | 2 | 41 | 1 |
| பிரெட் லீ | 09 | 0 | 58 | 0 |
| பைக்கல் | 10 | 0 | 20 | 7 |
| ஹொக் | 10 | 1 | 28 | 0 |
| லீமன் | 10 | 0 | 34 | 0 |
| சிமண்ட்ஸ் | 02 | 0 | 20 | 0 |

**பந்து வீச்சு - இங்கிலாந்து அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| கெடிக் | 09 | 2 | 35 | 4 |
| அன்டர்சன் | 9 | 0 | 66 | 0 |
| பிளிண்டோவ் | 9.4 | 1 | 26 | 0 |
| வைட் | 10 | 2 | 21 | 1 |
| கைல்ஸ் | 10 | 0 | 42 | 2 |
| வெகன் | 02 | 00 | 10 | 0 |

அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homelan

# ஒருபுறம் ஆட்லறிகளுடன் படைகள் மறுபக்கம் ஐந்நூறு போராளிகள்

## 'குச்சவெளி சம்பவம்' பற்றி பரபரப்புத் தகவல்

திருகோணமலை - குச்சவெளி கல்லம்பற்றையில் கடற்படையினரும், புலிகளும் ஒருவரை ஒருவர் சுற்றி வளைத்ததால், நான்காம் கட்ட ஈழப்போர் ஏற்படக்கூடிய அபாயநிலை ஏற்பட்டதாகவும், அரச படையினர் முழுஅளவிலான தாக்குதலுக்குத் தயாராகியதாகவும் கொழும்பு ஊட கங்களில் தகவல்கள் வெளிவந்துள் ளன.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது,

அமைச்சர் மிலிந்த மொறகொட, கடற்படைத்தளபதி தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி பலகல்ல ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த போதுதான், குச்சவெளியில் கடற்படையினர் ஏழு புலிகளைச் சுற்றிவளைத்த தகவல் அவர்களுக்குக் கிடைத்தது.

இதையடுத்து, பலாலியிலுள்ள குடாநாட்டுக்கான கட்டளை அதி காரி மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகாவின் அறைக்குச் சென்ற கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, அங்கிருந்து குச்ச வெளியில் கடற்படையின் நடவடிக் கைகளை நெறிப்படுத்தினார்.

அத்துடன், குச்சவெளியில் ஏற் பட்ட முறுகல் நிலைமை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்பு கொண்டு அமைச்சர் மிலிந்த மொறகொட நிலைமையை விபரித் தார்.

இந்த நிலையில்தான் புலிகள் தமது 500 போராளிகளை அப்பகுதி நோக்கி நகர்த்திய செய்தி அங்கு கிடைத்தது.

அதேவேளை இராணுவத் தள பதி லெப்ஜெனரல் லயனல் பலகல்ல, திருமலை கட்டளைத் தளபதியுடன் தொடர்பு கொண்டு படைகளை உஷார்ப்படுத்தவும் மேலதிக படை களை சம்பவ இடத்துக்கு அனுப் பவும் உத்தரவுகளை இட்டார்.

இதற்கமைய மணலாற்றுப்பகுதி யில் இருந்து கெமுனுவோச் படைப் பிரிவு ஒன்று திருகோணமலை நோக்கி நகர்த்தப்பட்டது. திருகோ ணமலையில் இருந்து இரண்டு கொமா ண்டோ படைப்பிரிவுகள் குச்சவெளி நோக்கிச் செல்லப் பணிக்கப்பட்டன.

அத்துடன் திருகோணமலையி லிருந்து இராணுவத்தின் ஆட்லறி களும் குச்சவெளியை அண்டிய பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு முழு அளவிலான தாக்குதலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா, ஹிங் குராங்கொட விமானப்படைத் தளத் துடன் தொடர்பு கொண்டு, அங்கி ருந்து இரண்டு பெல் ஹெலிகளை உடனடியாகப் புறப்பட்டு புனானை முகாமுக்குச் செல்லப் பணித்தார்.

அங்கு, இராணுவ முகாமில் இருந்து இராணுவக் கொமாண் டோக்களை ஏற்றிக்கொண்டு திரு கோணமலைக்குச் செல்வதற்கே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இதேவேளை - மறுபுறத்தில் இலங்கை போர் நிறுத்தக்கண் காணிப்புக்குழு இரு தரப்புக்களுக் குமிடையிலான முறுகல் நிலை யைத் தணிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது.

பலத்த முயற்சிகளின் பின்னர், அன்றிரவு 7.35 மணியளவில் விஜய காந்தன் தலைமையிலான ஏழு புலிகளையும் விடுவித்து முற்று கையை விலக்கக் கடற்படையுடன் இணக்கம் காணப்பட்டது.

இதன்மூலம் நான்காவது கட்ட ஈழப்போர் மூளுவது மயிரிழையில் தவிர்க்கப்பட்டதாக கொழும்பு ஊட கங்கள் மேலும் தெரிவித்தன.

ICC Cricket World Cup South Africa 2003

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
இன்றைய ஆட்டங்கள்

நியூசிலாந்து Vs கனடா - Willowmoore Park, Benoni - 2 pm.
தெ. ஆபிரிக்கா Vs இலங்கை - Kingsmead, Durban - 6.30 pm
நமீபியா Vs நெதர்லாந்து - Good Year Park, Bloemfontein - 2 pm

# மீண்டும் மரண தண்டனை; ஜனாதிபதி கடும் எதிர்ப்பு!

## உயிரைப்பறிக்க அரசுக்கு அதிகாரமில்லையாம்

மரணதண்டனையை மீளவும் நடைமுறைக்குக் கொண்டு வருவ தற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றபோதும், ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்க இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவருவதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பில் ஒவ்வொரு மனிதனின் உயிர் வாழ்வுக்கும் உத் தரவாதம் வழங்கப்பட்டிருக்கிறது. மரண தண்டனையை வழங்குவதன் மூலம் அரசாங்கம் ஒரு மனிதனின் உயிரைப் பறிக்க அதிகாரமில்லை.

அபிவிருத்தி அடைந்த நாடுக ளில் மரணதண்டனை தடைசெய் யப்பட்டிருக்கிறது. அத்துடன் இதறகு சர்வதேச மனிதஉரிமைகள் அமைப்புக்களும் எதிர்ப்புத் தெரி வித்து வருகின்றன. ஹொங்கொங் கைத் தலைமையகமாகக் கொண்ட ஆசிய மனிதஉரிமை அமைப்பு அர சாங்கத்துக்கு இது தொடர்பாக கடும் கண்டனம் தெரிவித்துள்ள தாகவும் ஹரீம் பீரிஸ் மேலும் தெரி வித்துள்ளார்.

## 13 கிராமிய மின்திட்டங்கள் நேற்று ஆரம்பித்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பதின்மூன்று கிராமங்களுக்கும், இரண்டு கோயில் களுக்குமான மின்விநியோகத்தினை மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரிய சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத் தார்.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு குப்பிளானிற்கு சென்ற அமைச்சர் கரு ஜெயசூரிய, முதலாவது மின்விநி யோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

அடுத்து - சுன்னாகம் மின்வழங் கும் நிலையத்திற்குச் சென்ற அவர், மின் நிலையத்தையும் பார்வையிட்டார்.

அங்கிருந்து பொலிகண்டி சென்ற அமைச்சர் அங்குள்ள மின்விநியோ கத்தை ஆரம்பித்துவைத்ததுடன், அருகிலுள்ள அப்பகுதி மீனவர்க ளிடம் மின் பிடிப்பதில் உள்ள பிரச் சினைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

செல்வச்சந்நிதி ஆலயம், வல் லிபுரக் கோயில் மற்றும் நவக்கிரி, கரந்தன், சிறுப்பிட்டி, நீர்வேலி, ஆவரங்கால், குமரகோட்டம், மாத கல், இளவாலை, மாகியப்பிட்டி, வியாபாரி மூலை ஆகிய இடங்க ளிற்குச் சென்று கிராமிய மின் விநி யோகத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மின்சக்தி பிரதி யமைச்சர் சாகள ரத்னாயக்க, இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், அப்பாத்துரை விநா யகமூர்த்தி, ரவிராஜ் ஆகியோரும், பிராந்திய மின் அத்தியட்சகர் முத் துரட்ணானந்தம், பிரதம பொறியிய லாளர் வேலுப்பிள்ளை, யாழ். மின் அத்தியட்சகர் வல்லிபுரம் ஆகியோ ரும் கலந்துகொண்டனர். (ரா)

## யாழ்.நகர மத்தியில் 35 வயதுடையவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள வைரவர் கோவில் பகுதியில் இருந்ததாக தெரி வித்து - பொலிஸாரினால் சடலம் ஒன்று யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று நண்பகல் சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமே ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சடலம் அடையாளம் காணும்பொருட்டு, யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது.

### புலிகளின்...

அமைதி முயற்சிகள் குறித்த புலிக ளின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்ததாக வும் தெரிவித்தார்.

புலிகள் வன்முறைக்கு மீண்டும் செல்லாமல் அமைதி வழியில் தொடர்ந்தும் செல்வதற்கு உறுதி யாக இருப்பதாக தமிழ்ச்செல்வன் தன்னிடம் மிகத் தெளிவாக எடுத் துச் சொன்னதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கொழும்பு....

இது குறித்து அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. ஆனாலும், இதுவரை இறுதி முடிவு எதுவும் எடுக்கப்பட வில்லை. இச்சோதனைச் சாவ டியில் இராணுவத்தினருக்குப் பதி லாக, சுங்க அதிகாரிகளை நிய மிக்குமாறும் வர்த்தக சம்மேளனம் கேட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியில் - யாழ்ப்பா ணத்திலிருந்து பனை அபிவிருத்தி சபை, பாற்சாலை என்பன கலந்து கொள்ளப்போவதாக அறிவித்துள் ளன.

### வன்னிக்குத்...

பொறுப்பாளர் தமிழினி, தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப் பாளர் தங்கன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவத்துறைப் பொறுப்பாளர் றேகா, கொள்கை முன் னெடுப்புப் பொறுப்பாளர் இளங்கோ, தமிழீழ புனர்வாழ்வுக் கழகப் பொறுப் பாளர் கே.பி. றெஜி, தமிழீழ மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், ஈழநாதம் பொறுப்பாளர் பவா, பெண்கள் புனர் வாழ்வுப் பொறுப்பாளர் கலைமகள், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப் பாளர் தமிழன்பன் உட்படப் பல போராளிகள் அவர்களைக் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

பின்னர், பாலசிங்கம் தம்பதியினர் புதுக்குடியிருப்புக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

## சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர்!

(கொழும்பு)

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்பதாக, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.விஜேசிறி தெரிவித்தார்.

கடந்த காலங்களை, விட இம்முறை அதிகமான மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தோற் றியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வருடம் - 5 இலட்சத்து 13 ஆயிரத்து 876 பரீட்சார்த்திகள் தோற்றியதாகவும், இவர்களில் 3 இலட்சத்து 83 ஆயிரத்து 15 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள் என்றும - எஞ்சிய, 1 இலட்சத்து 38 ஆயிரத்து 52 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## றெலவ்சன் பிரபாவைச் சந்திப்பார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வின் புதிய தலைவராகப் பொறுப் பேற்கவிருக்கும் றெலவ்சன் நாளை மறுநாள் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதன்போது யுத்தநிறுத்த அமு லாக்கம் தொடர்பாக இருவரும் கலந்துரையாடவுள்ளனர்.

இச்சந்திப்பையடுத்து வட- கிழக் கிலுள்ள படையதிகாரிகளுடனான கூட்டத்திலும் ஜெனரல் றெலவ்சன் பங்கேற்பார் எனத் தெரியவருகிறது.

## உண்ணாவிரதம் தொடர்கிறது

களுத்துறைச் சிறைக் கைதி களின் சாகும்வரையிலான உண்ணா விரதப் போராட்டம் நேற்று இரண்டா வது நாளாகவும் தொடர்ந்து நடை பெற்றது. 66 கைதிகள் போராட் டத்தை தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின் றனர். (01)

### வடக்கு...

தெரிவித்துளளாா.

இந்தச் சந்திப்பு நேற்று கிளிநொச்சி யில் இடம்பெற்றுள்ளது.

தாய்லாந்துத் தூதுவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுத லைப் புலிகளுடன் நடந்த சந்திப்பு மிக மகிழ்ச்சிகரமாக உள்ளது. வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு நேரில் வந்து, போரினால் பாதிக்கப் பட்ட மக்களின் நிலைமைகளை பார்வையிட்டமை பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

பல ஆண்டுகளாக உரிமைகளுக் காக வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நீண்ட வரலாற்றைக் கொண்ட போராட்டத்தினை - சமா தான வழியில் பேசித் தீர்க்க எமது தாய்லாந்து தேசம்தான் முதலில் களமிறங்கியது என்றும் அவர் குறிப் பிட்டார்.

### தெற்கில் நடந்த...

விரிவான பயிற்சிகளை இந்த நடவடிக்கையில் தெரிந்து கொள்ள முடிந்ததாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அதேவேளை, இலங்கைப் படை யினருக்கு நவீன ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி, யுத்தத்தில் நவீன தந்திரோபாயங்களைப் பயன்படுத்து வது உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப் பட்டன.

இராணுவ விடயங்களில் மாத்தி ரமன்றி, மனிதாபிமான விடயங்களில் எப்படி படையினர் செயற்பட வேண் டும் என்பதும் இப்பயிற்சியில் இடம் பெற்றிருந்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

மேலும், கடல் வழி நடவடிக் கைகள், கடற்கல நடவடிக்கைகள், ஹெலியில் இருந்து தரையிறக்கம், நீருக்குள்ளால் ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்துவது, தாக்குதல் நடாத்தி விட்டு விமானம் மூலமாகத் தப்பிச் செல்வது உள்ளிட்ட பயிற் சிகள் இந்நடவடிக்கையின்போது வழங்கப்பட்டன.

இதுவரை 'பலன்ஸ் ஸ்ரைல்' நடவடிக்கையின் மூலம் சுமார் ஆயிரம் படையினருக்கு, அமெரிக் கப் படையினர் விசேட பயிற்சிகளை அளித்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று முதல் தொடர் வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், இன்று முதல் தொடர் ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடு படப்போவதாக அறிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக நிர்வாகம், தமக்கு வழங்கிய வாக்குறுதிகளை உரிய முறையில் நடைமுறைப்படுத் துவதில் இழுத்தடித்து வருகின்ற மைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இப் போராட்டத்தில் குதித்துள்ளதாக சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

சங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேறும் வரை தொடர்ந்து தாம் போராட்டத்தில் ஈடு படவுள்ளதாக, ஊழியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் பரீட்சைகளைக் கருத்திற்கொண்டு - நீர், மின்விநி யோகம், பரீட்சை நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள், பாது காப்பு உத்தியோகத்தர்கள் தொடர்ந்து கடமையில் ஈடுபடுவர் எனவும் அவர்கள் தெரிவித்துள் ளனர்.

அதேவேளை, கடந்த புதன்கி ழமை ஊழியர் சங்கத்தினர் அடை யாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டி ருந்தமை தெரிந்ததே. (ச)

விசேட அறிவித்தல்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
05,08/03/2003
பல மாணவர்களின் வேண்டுகோளிற்கு அமைய பின்வரும் கற்கை நெறிகள் வார,வார இறுதி நாட்களில் ஆரம்பமாகின்றன.
Dip. in MS Office
Dip. in Desktop Publishing
Dip. in Internet & e-mail
Programming in Java
Programming in C++
Programming in Visual Basic
Dip. in Hardware
A/L மாணவர்களுக்கான C.I.T வகுப்புகள்
அலுவலகங்களில் கணனியா?
உங்களுக்காகவே மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
மேலதிக விபரங்களுக்கு
STP Computer World (Pvt.) Limited
54A, Kantharmadam, Jaffna. Branch: Sankaththanai, Chavakachcheri

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.